# ஸ்ரீ குமரகுருபரர்



தொகுதி - 9 பகுதி - 8

வைகாசி - 1 15—5—87

உ

சிவ சிவ

கற்றுப் பிறர்க்குரைத்துத் தாம்நில்லார் வாய்ப்படூஉம்
வெற்றுரைக்கு உண்டுஓர் வலியுடைமை சொற்ற நீர்
நில்லாதது என் என்று நாணுறைப்ப நேர்ந்தொருவன்
சொல்லாமே சூழ்ந்து சொலல்.

கற்கவேண்டிய நீதிகளை எல்லாம் கற்று, அவற்றைப் பிறரிடம் தெளிவாக எடுத்துக் கூறிவிட்டுத் தாம்மட்டும் அந்நீதிநெறிநில்லாதவரின் வாயிலிருந்து வெளிப்படும் பயனற்ற சொல்லுக்கும் ஒரு வல்லமை உண்டு. அவர் முன்னே ஒருவன் வந்து நின்று 'எனக்கு நீதி சொல்லிய நீர் மட்டும் அந்நீதி நெறியில் நிற்காதது என்ன காரணம்?'' என்று நாணம் மிகும்படி சொல்லாத காலத்தைத் தெரிந்து அவர் சொல்லுதல்தான் அந்த வல்லமை.

— ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்

# ஸ்ரீ குமரகுருபரர்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர் கயிலைமாமுனிவர்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித்தம்பிரான்சுவாமிகள் அவர்கள்
அருளாணையின் வண்ணம் வெளிவரும் சமய இலக்கியத் திங்களிதழ்

சிறப்பாசிரியர்கள்

திரு. அ. ச. ஞானசம்பந்தன்
திரு. தா. ம. வெள்ளைவாரணம்

ஆசிரியர் குழு :

திரு. மு. அருணசலம்
திரு. கா. ம. வேங்கடராமையா
முதுமுனைவர்
ச. தண்டபாணி தேசிகர்
மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்முதலியார்
திரு. க. வச்சிரவேல்முதலியார்
புலவர் திரு. கீரன்
டாக்டர் டி. பி. சித்தலிங்கையா
டாக்டர் கு. சுந்தரமூர்த்தி
பனசை திரு. சுவாமிநாதன்

உள்ளே :

1 பெருமான் புகழ்
2 கலங்கரைவிளக்கம்
3 அம்பலக் கூத்தனார் திருமேனியின் முருகியல்
4 திருவிசைப்பா திருப்பல்லாண்டுகளின் இசை
5 ஊழ்வினை நலிய ஒட்டார்
6 ஆலயபூஜைப் படிக்காசு நிதி
7 அப்பர் கண்ட இராமர்
8 ஈங்கோய்மலையின் இயற்கை நலம்
9 நூல்நிறை
10 அங்கதம்
11 இதமான வாழ்வுக்கு எளிய வழிகள்
12 அம்மானையின் தோற்றம்
13 ஞானமிர்தம்

பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் றிறைஞ்சிடுக
ஆங்கொன்னறக் கண்ணி யவர்.



# பெருமான் புகழ்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர்

'கயிலைமாமுனிவர்' ஸ்ரீலஸ்ரீ

## காசிவாசி முத்துக்குமாரசுவாமித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

எல்லாமும் எல்லாருக்கும் தேவையாக இருக்க முடியாது. சிலருக்கு மிக இன்றியமையாத பொருள்கள் சிலருக்குத் தேவையே இல்லாத பொருளாக அமையும். பொருள்களை வாங்கும் போதும், சேர்க்கும் போதும் அதுவாணாள் முழுவதற்கும் தேவைதானா என்று அவதானிக்க வேண்டும். சில நேரங்கட்கு மட்டும் தேவை எனக்கணிக்கப் பெறுபவை உடமைகளாகக் கருதப்பட மாட்டா. எஞ்ஞான்றும் இன்றியமையாத் தேவைகளே உடைமைகளாக இருக்கத்தக்கவை.

மகத்மா காந்திஜீ கொண்டிருந்த பதினொரு விரதங்களில் சேமியாமை என்பது ஒரு விரதம். சேமியாமை என்பதற்குக் காந்திஜீ கொடுக்கும் பல விளக்கங்களில் "தனக்குத் தேவையில்லாத பொருள்களைத்தான் முடக்கி வைத்துக் கொள்ளாமை" என்பதும் ஒன்று. இந்த விளக்கத்தில் இன்னுமொரு நுணுக்கத்தையும் சேர்த்துக்

கொள்ளலாம். குறிப்பிட்ட ஒரு பொருள் இல்லாமலேயே அதன் தொழில் நிறைவேறும் பட்சத்தில் அந்தப் பொருள் தேவையற்றதாகிறது. இதை இப்படி விளக்கலாம். "நகத்தாலேயே ஆரஞ்சுப் பழத்தை நன்கு பிரித்துச் சுளை எடுப்பவனுக்குப் பேனக்கத்தி தேவையற்ற பொருள்"

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மேலே கூறிய படியான சிந்தனைகளில் ஊறித்திளைத்திருக்க வேண்டும் அச்சிந்தனைகளைச் சிவபெருமானின் வீரச் செயல்களுடன் ஒட்டிப் பார்த்த போது அவருக்கு வியப்பும் சிரிப்பும் வந்துவிட்டது அதனடிப்படையில் "சிவபெருமானின் கையிலே உள்ள வில்லும், திரிசூலமும் அவருக்குத் தேவையற்றவை; அநாவஸ்யமானவை" என்கிறார்.

சிவபெருமானுக்குப் பிநாகபாணி, சூலபாணி என்பன சிறப்புப் பெயர்கள் பிநாகம் என்பது வில்லைக் குறிக்கும். சூலமும் வில்லும் சிவபெருமானுக்குச் சிறப்புப் பெயர் ஏற்படக் காரணமாக இருந்தனவேயல்லாமல் அவை சாதித்த சாதனை என்ன? என்கிறார் அடிகளார். வரமிகுந்த பேராற்றல் படைத்த சிவபெருமானுக்குத் திரிசூலமும் வில்லும் எந்த வகையில் துணையாக முடியும்?

சிவனின் வீரச்செயல்கள் எல்லாம் எவ்வெவற்றால் நிறைவு பெற்றன என்று பட்டியலே தருகிறார் ஸ்ரீ சுவாமிகள்.

மன்மதனை நீறுபடச் செய்தான் நிமலன். வில்லால் அம்பு தொடுத்தவன் மன்மதன். அவனை விற்போரில் அல்லவா சிவன் வென்றிருக்க வேண்டும்? சமமாகப் போர் செய்வது சமம்; சமர்! அவ்வளவுக்கு அவன் அருகதை உள்ளவனல்ல! பார்வைகளில் தோன்றும் மன்மதன், சிவன் பார்வையினாலேயே பொசுங்கினான்.

"வில் மதனை வென்றது அவர் விழியே"

அடுத்துத் திரிபுர தகனம் என்பது சிவனின் வீரச் செயல்களில் மிகக் குறிப்பிடத்தக்கதாகும்' அவ்வீரச் செயலிலாவது சிவன் வில்லையோ திரிசூலத்தையோ பயன் படுத்தினை? என்ருல் இல்லை! இரும்பு, வெள்ளி, பொன் என்ற மூன்று உலோக மதிலூர்திகள் அழிவதற்குச் சிவ பெருமான் பயன்படுத்திய ஆயுதம் புன் சிரிப்பு மேருவை வில்லாக, வாசுகியை நாணுக, வாயு அக்கினிகளை அம்பு களாகக் கொண்டு போர் செய்ய முயல்கையில் அவை தம்முள் ஆணவத்தால் கலாம் விளக்கச் சிவன் புன்முறு வலாலேயே திரிபுர மெரித்தார் எனப் புராணங்கள் கூறும்.

"ஒன்ருர்தம்
பொன்னெயில் தீ மடுத்தது இன்னகையே"

இன்பம் செய்தலின் அந்நகை இன்னகையாயிற்று

மன்மதன் தேவதைகள் பட்டியலில் வருபவன். அதாவது "சில்லாண்டிற் சிதையும் சிறுதெய்வம்" அவனை அழிக்கப் படைக்கலன் தேவையில்லை. அன்றியும் அது தகனம்; காம தகனம் அடுத்ததும் திரிபுர தகனம். திரிபுர தகனத்து அழிந்தோர் அரக்கர். இவ்வகையில் படைக் கலன் தொடாது வினைமுடித்த பரமன் முப்பெரும் கடவுளருள் முதல்வனுகிய பிரமனின் ஆணவம் அடக்கச் செய்த அருட் செயலிலாவது படைக்கலம் தொட்டிருக் கலாமே என ஒரு வினு நிகழும் அங்கும் சிவன் படை தொட்டானில்லை. பிரமனின் நான்கு முகங்களுடன் கூடிய மேல் நோக்கிய முகமாகிய ஊர்த்துவ முகத்தை நீக்க வேண்டும். அதை வாளால் வீழ்த்தவில்லை. சிவன் தன் கூரிய நகங்களால் பிரம்மதேவனின் சிரசைக் கிள்ளி எடுத்தான்.

பூமிசையோன்
தார்முடி கொய்தது கூருகிரே"

பிரமன் சிவனை வணங்கினாலும் மேல் நோக்கிய முகம் வணங்காது. எனவே இக்கலையெடும்பு ஆணவத்தை அழிக்கும் திறத்தைக் குறிப்பதாகும்.

மார்க்கண்டேயன் உயிர் எடுக்க வந்த கொடும் கூற்றைக் கடவுள் காலால் உதைத்தழித்தான். கூற்றுவன் பாசாயுதம் எடுத்து வந்த போதும், சிவன் காலே ஆயுதமாகக் கடிந்தான்.

"ஆர் உயிர்கள்
கூற்றுஉயிர் உண்டது அடித்தலமே"

ஆகச் சிவபெருமானின் வீரச்செயல்களுள் பௌராணிகர்களாலும் நாயன்மார்களாலும், பக்தர்களாலும் பெரிதும் கொண்டாடப்படும், காம தகனம், திரிபுரதகனம், பிரமன் சிரமெடுத்தது, காலனைக் காய்ந்தது ஆகிய நான்கு வீரச் செயல்களிலும் சிவபெருமானின் கரங்களில் திகழும் வில்லும், திரிசூலமும் பயன்படுத்தப் பெறவில்லை, எனவே அவை தேவையற்றவை! என்கிறார் ஸ்ரீ சுவாமிகள்.

பயனற்று வாழ்பவனைப் "பூமிக்குப் பாரமாக வாழ்கிறான்" என்று சொல்வதைப் போல, அக்கருவிகளைப் "பிடித்துப் பிடித்துச் சிவனின் கரங்கள் சிவப்பதற்காக உள்ளன" என்று கூறுகிறார்.

யேற்றான்
பரசும் பிநாகமும் சூலமும் என்னே
கரமலர் சேப்பக் கொளல்"

என்பன அவ்விறுதியடிகள்.

சிவனுக்கு எக்கருவிகளும் அலங்காரார்த்தமேயன்றிப் பிரயோஜனார்த்தமன்று என்ற தத்துவத்தையே இப் பாடலால் ஸ்ரீ சுவாமிகள் மன்பதைகட்கு வலியுறுத்துகிறார். பாடலின் முழுவடிவையும் பார்ப்போம்.

“வில்மதனை வென்றது அவர்விழியே ஒன்னார்தம்
பொன்எயில் தீமடுத்தது இன்னகையே பூமிசையோன்
தார்முடி கொய்தது கூருகிரே ஆர்உயிர்கள்
கூற்றுஉயிர் உண்டது அடித்தலமே ஏற்றான்
பரசும் பினாகமும் சூலமும் என்னே
கரமலர் சேப்பக் கொளல்.

சிதம்பரச் செய்யுட் கோவையின் 21 ஆம் திருப் பாடலாகிய இதன் கீழ்,

“இது பலவிகர்பத்து ஆறடிப் பஃறொடை வெண்பா இதன் முதலடி ஈற்றயற்சீர் ஒழித்து ஏனை முச்சீரும் இரண்டெமெழுத்து ஒன்றத் தொடுத்தமையால் கீழ்க்கதுவாய் எதுகை. இரண்டாமடி முதற் சீரும் மூன்றாம் சீரும் இரண்டாம் எழுத்து ஒன்றத் தொடுத்தமையால் பொழிப் பெதுகை மூன்றாமடி முதலயற் சீரொழித்து ஏனை முச் சீரும் இரண்டாமெழுத்து ஒன்றத் தொடுத்தமையால் மேற் கதுவாய் எதுகை. நான்காமடி முதற்சீரும் ஈற்றுச்சீரும் இரண்டாமெழுத்து ஒன்றத் தொடுத்தமையால் ஒரூஉ எதுகை”

— என்ற செய்யுளிலக்கணக் குறிப்பு உள்ளது.

| அடிஎண் | எதுகை முறை. | | | | |
|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | |
| 1. | ⌒ | ⌒ | — | ⌒ | கீழ்க்கதுவாய் |
| 2. | ⌒ | — | ⌒ | — | பொழிப்பு |
| 3. | ⌒ | — | ⌒ | ⌒ | மேற்கதுவாய் |
| 4. | ⌒ | — | — | ⌒ | ஒரூஉ |

— இதனால் அவ்விலக்கணக் குறிப்பை விளங்கிக் கொள்ளலாம். மூன்றாமடியுள் தார்முடி என்பதற்குக் கூருகிர், ஆருயிர் என்பனவருர்க்க எதுகைகள் எனக் கொள்ள வேண்டும்.

**சிவ சிவ**

# செல்வாக்கு

நெல்லை சிவமணி. புலவர் ம. சிவசம்பு எம். ஏ.,
பாளையங்கோட்டை

இக்காலத்தில் இச்சொல்லுக்கு இருக்கும் மதிப்பு மிக அதிகம். சிலர் செல்வாக்கினால் பல நன்மைகளைச் செய்து உயர்நிலை அடைகின்றனர். சிலர் தீமைகளைச் செய்து தாழ்வு நிலை அடைகின்றனர்.

சிலர் செல்வாக்கைப் பயன்படுத்துவதே இல்லை. செல்வாக்கைப் பயன்படுத்தாமல் இருப்பதுதான் உயர்ந்தது என்று நினைக்கின்றனர். இப்படி இருப்பது சரியா? தவறா? இதுவே கேள்வி. சரி என்று சிலரும் தவறு என்று பலரும் வாதாடுகின்றனர். இதற்குச் சரியான விடை தேடி அலைந்தேன். அதற்குச் சரியான விடை கூறியவர் ஸ்ரீ குமரகுருபரர்.

செல்வாக்கு என்பது சொல்வன்மையாலும், செல்வ பலத்தாலும், நண்பர்கள் கூட்டுறவாலும் ஏற்படக் கூடியது. பிறர்க்கும் தமக்கும் பயன்படும் வகையிலும் பிறர் மதிப்பு அளிக்கும் நிலையிலும் பேசும் ஆற்றலே செல்வாக்கு. இந்தச் சொல்வாக்கு இருக்குமானால் அவர் செல்வாக்குப் பெறுவர்.

இந்தச் செல்வாக்கு ஒருவர்க்கு இருக்குமானால் அதைப் பயன்படுத்தாமல் வீணாகக் கை விடக்கூடாது. ஓர் ஏழை, அன்னார் ஒரு சொல் சொன்னால் அதனை மதித்துப் பிறர் அந்த எளியவர்க்கு உதவி செய்வர் என்பதை அறிந்து அவரிடம் உதவி நாடும் பொழுது அது செய்ய மறுப்பாராகில் அது குற்றம். மேன்மேலும் வளர்வதற்குக் காரணமான செல்வாக்கை (நல்வினையை) அவர் அழிக்கின்றார். செல்வாக்கினால் ஒரு செயல் செய்யும் பொழுது தம் செல்வம் எல்லாம் கெட்டொழியும் ஓர் நிலை ஏற்படுமானால் அதற்கும் அஞ்சக் கூடாது என்கிறார். செல்வாக்கு உடையவர்கள் செய்யக் கூடிய நன்மைகள் விரைவில் செய்து முடிக்க வேண்டும் என்கிறார்.

சொல்வன்மை உண்டெனில் கொன்னே விடுத்தொழிதல்
நல்வினை கோறலின் வேறல்ல — வல்லைத்தம்
ஆக்கம் கெடுவ(து) உளதெனினும் அஞ்சுபவவோ
வாக்கின் பயன் கொள்பவர்

நீதிநெறி விளக்கம் — 69

# கலங்கரை விளக்கம்

அண்ணு சச்சிதானந்தம் M. A.
காஞ்சிபுரம்,

கடற்கொந்தளிப்பாலும் கடுங்காற்றின் சீற்றத்தாலும் கலக்கமுறும் கப்பற் பயணிகளுக்கு, 'இதோ கரை அண்மையிலிருக்கிறது, கவலைப் படாதீர்கள்: வந்து சேருங்கள்!' என்று அறிவித்துக் கொண்டிருப்பது கலங்கரை விளக்கம் ஆகும்.

அதைப் போலக் காரண காரியத் தொடர்ச்சியாய் வருகிற பிறவிக் கடலில் மனமாகிய தோணியிலே பயணம் செய்பவர்களுக்கு அடிக்கடி ஏற்படும் இடையூறுகளிடையே நம்பிக்கையினையும் நல்லாதரவினையும் தருபவன் இறைவன். அவன் கலங்கரை விளக்கமாக ஆருயிர் களுக்கு விளங்குகிறான்: தன் அடியார்கள் எப்பிறவி எடுத்தாலும் எவ்விடத்துப் பிறந்தாலும் இதோ நான் இங்கே இருக்கிறேன் என்று தன் இடத்தை ஒளிபோட்டு காட்டிக்கொண்டிருக்கிறான். அப்படிப் பட்ட சிறந்த கலங்கரை விளக்கம் திகழுகின்ற இடம் சீர்காழிப் பதி.

ஊழிக் காலத்தும் அழியாத பதி காழிப்பதி.

அந்த ஊழிக்காலத்தும் அடியார்களுக்கு மட்டும் அல்லாமல் அனைத்துயிர்களுக்கும் கலங்கரை விளக்கமாய்ப் புகலிடமாயிருப்பவன் அவன்தான். திருஞானசம்பந்தர் பாடலைக் கவனியுங்கள்:

*"எங்கேனும யாதாகிப் பிறந்திடினும் தன்னடியார்க்(கு)*
*இங்கேயென் றருள்புரியும எமபெருமான் எருதேறிக்*
*கொங்கேயு மலர்ச்சோலைக் குளிர்பிரம புரத்துறையும்*
*சங்கேயொத் தொளிர்மேனிச் சங்கரன்தன் தன்மைகளே!'*

கலங்கரை விளக்கு மிக்க ஒளியினை உடையது.

கடவுளின் திருமேனியும் மிக்க ஒளியினை உடையது. அதனுற்றான்

'சங்கே ஒத்து ஒளிர்மேனிச் சங்கரன்' என்றார்.

சங்கரன் என்றாலே நலத்தைச் செய்பவன் என்றுதான் பொருள் அவனுடைய தன்மைகள் எத்தகையனவாயிருக்கும்? நன்மைகள் செய்வனவாகத்தானே இருக்கும்!

அவன் மேனி ஒளிர் மேனி — வெண்ணீறமேனி

சங்கு, வெண்ணிறமுடையது. சங்கரனும் வெண்ணீறு பூசிய மேனியினன். அவன் ஏறிய எருதும் வெண்ணிறம் உடையதே.

சங்கு சுட்டாலும் வெண்மை தரும்.

சங்கரனை யார் வைதாலும் இகழ்ந்தாலும் வெறுத்தாலும் அவன் அவர்களுக்கும் நன்மையினையே தருவான். இஃதும் அவனுடைய பெருங்கருணைத் தன்மைகளில் ஒன்ருகும்.

அவன் ஏறிய எருது அறத்தின் வடிவமாக விளங்குவது. அறத்தின் நாயகன் சங்கரன். உலகில் நீதி-தருமம் எங்கே கிடைக்காமற் போயினும் எங்கே தருமம் நிலைகுலைந்து போயிருந்தாலும் இங்கே வந்தால் நீதி கிடைக்கும் என்ற நிச்சயம் உண்டு. எல்லாவிடங்களிலும் உள்ள நீதி மன்றங்களுக்கும் மிகவுயர்ந்த தலையாய (Supreme) உயர்நீதிமன்றம் இதுதான். இதுவும் சங்கரன்தன் தன்மைகளுள் ஒன்ருகும்.

வெயிலிலிருந்து வருபவருக்கு நிழல் இதமாக இருக்கும். வெய்ய பிறவிகளில் புகுந்து புகுந்து நொந்து வாடி வருபவருக்கு இந்தச் சீகாழிப் பதி குளிர்ச்சியையே தருகிறதாம். அதனுல்தான் 'குளிர் பிரமபுரம்' என்ருர் சம்பந்தர்.

மேலும் வெயிலிலிருந்து வாடிப் பசியோடு வருபவருக்கு உணவையோ தாகத்திற்குத் தண்ணீரையோ தருதல் வேண்டும்- அதைப்போல இக்குளிர்பிரமபுரம் குளிர்ச்சியை மட்டும் தரவில்லை, சிவானந்தமாகிய பேரின்பத் தேனையும் தருகிறது.

பாலை வனத்திலே ஒரு குளிர்ந்த சோலை - சோலையிலே ஒரு மலர் - மலரிலே தேன் (கொங்கு)

தெய்ய பிறவியாகிய பாலையிலே சோலை போன்று சீர்காழிப் பதி - அப்பதியிலே திருத்தோணியப்பர் திருக்கோயிலாகிய மலர்-- அங்கே வீற்றிருக்கும் இறைவன் தேன்!

இப்பெழுது மீண்டும் ஒருமுறை அப்பாடலைக் காண்போம்.

'எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும் தன்னடியார்க்(கு)
இங்கேயென் றருள்புரியும் எம்பெருமான் எருதேறிக்
கொங்கேயும் மலர்ச் சோலைக் குளிர்பிரம புரத்துறையும்
சங்கேயொத் தொளிர்மேனிச் சங்கரன்தன் தன்மைகளே,

# அம்பலக் கூத்தனுர் திருமேனியின்

# முருகியல்

முனைவர் கோ. தெய்வநாயகம்,

இணைப் பேராசிரியர், கட்டிடக் கலைத் துறைத் தலைவர்,

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

உலகின் மிகச் சிறந்த கலைப்படைப்பாகிய நடராசர் திருமேனிப் படைப்பின் தனிப்பெரும் புகழ் தமிழகத்தையே சாரும். அத்தகு நடராசர் திருமேனிகள் கி. பி. ஆறும் நூற்ருண்டிலும் திகழ்ந்தமைக்குச் சைவசமய குரவர் சான்றளித்துள்ளனர். மனித உள்ளத்தில் முருகியல் உணர்வைத் தூண்டி அவனது "மனம்" மணம் பெறச் செய்யும் இறைத் திருமேனிகளில் தலைசிறந்தது நடராசர் திருமேனியேயாகும் அந் நடராசர் திருவடிவங்களுள் தன்னகரில்லாத தெய்வீகக் கலைத் திறமும் இன்னுணர்வில் இலக்கணப் படைப்பாகவுந் திகழ்வது, தில்லையம்பலக் கூத்தனுரின் திருமேனியாகும்.

தில்லையம்பலத்தின் சிற்சபையில் திகழ்ந்திடும் சிவனுரின் திருமேனி ஆனந்த நட்டம் பயின்றிடும் நடராசர் திருமேனியாகும். சிவகாமியம்மையும் பதஞ்சலி முனிவரும், வியாக்கிரக பாத முனிவரும் கண்டு மகிழ, ஆன்ம கோடிகள் அனைத்தும் உய்தியுற இறையனுர் திருநட்டம் பயில்வதாக அமைந்தது இத்திருமேனி. ஐம்பொன்னுலாய இத்திருமேனி உலோகக் கலப்பு முறையும் வார்ப்பு நிலையும் மிகத் துல்லியமாக அமைந்து உலோகத்தின் ஒளி மிகுதியும் சிலையுருவ எழிற் கோல முழுமையினையும் ஒருங்கு ஒழுங்குறக் காட்டும் முழுமுதற் கலைத் திறமாக விளங்குகின்றது. மேலும் ஆக்குவித்தோரின் உணர்வில் - அறிவில் தோன்றிய முருகியல் உணர்வுகள் அனைத்தையும் ஒருங்கு கிளக்கவல்ல ஒப்புயர்வற்ற கலைப் பெரும் பெட்டகமாகத் திகழ்வதே இத்திருமேயின் நேரில்லாப் பெருஞ் சிறப்பு - முருகியலுணர்வில் முற்ருகத் திகழும்

"தெய்வீகம்" முழுதுற அமைந்த முத்தமிழ்த் திருமேனியும் இதுவே எனலாம். ஆம்! இயலிசை நாடகத் திருமேனியிதுவெனில் மிகை யன்று.

மூர்த்திச் சிறப்பால் முறை மாறிய சிறப்பும் இக்கனக சபைக்கு அமைகிறது. ஏனெனில் தமிழகக் கோயில்களில் எங்கும் இறையகத்துள் இருக்கும் இறைவடியே வணக்கத்திற்கு முழுமையாகக் கொள்ளப்படும். நடேசர் திருமேனி அம்பலத்தில் இடம் பெறும் காட்சிக்குரியதேயாம். எழுந்தருளுஞ் சிறப்பே எங்கும் இவ்வெழில் திருமேனிக்கமையும். ஆனால் தில்லையிலோ பெரு வணக்கத்திற்குரிய பேரருட் கோயில் நாதனார் நட்டம் பயின்றிடும் நடன சபையே யாகும். கிடைத்துள்ள தில்லைத் தேவாரப் பாக்கள் அனைத்தும் அம்பலந்தன்னையே குறிக்கின்றன. முற்றுந் துறந்து, ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்கும் கேடும் ஆக்கமும் கெட்டுப் பிறவாமை வேண்டிய பெருமக்களும் இத்தில்லைக் கூத்தனாரைக் கண்டு தொழுத அளவில், "மனித்தப் பிறவியும்" வேண்டுவதே என வேண்டுதல் இத்திருமேனி விளைக்கும் முருகியற் சிறப்பின் முதன்மையினை அளக்கத்தகும் அளவுகோல் எனலாம். இத்தொடருள்ளும் "வலித்த தகரவொற்று" இவ்வல்லாண்மையை நெடிது விளக்கத்தகும்குறிப்பெனலாம். "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே?" என்ற வினைக் குறியின் விளக்கமாகத் திகழும் திருமேனி ஆடற்கலையின் ஆண்மையை மென்மையுறக் கிளக்கவல்லது

தெய்வீகம் மனிதனுக்கு அப்பாற்படாமல் மானுடத்துடன் ஒன்றிக்கலந்த நிலையில் தெய்வீக, மானுடப் பெருஞ்சிறப்பின் அடிப்படையாம் நாட்டியக் கலையின் நாயக நிலையில் இத்திருமேனி சுத்த திருந்த வடிவாக்கம் பெற்றுள்ளது. நினைத்தவர்க்கு நினைத்த படி முருகியலைத் தரத்தக்க இத்திருமேனியின் வடிவமைப்பு நோக்கத் தக்கதாகும்.

**கலை நிலை :-**

பீடத்தினின்றும் வட்ட வடிவமாகக் கிளைத்த திருவாசியும் நான்கு கரங்கள், விரிந்த சடை இவற்றுடன் வலக்காலை பீடத்தில் மேலுள்ள குறள் – முயலகன் - முதுகில் ஊன்றி இடக்காலை எடுத்த குஞ்சிதபாதமாகக் கொண்டு நொடிப்பு நிலையில் சுழன்றாடிய ஆட்டத்தின் ஒரு நிலைப்பென உயிர்ப்புடன் அமைந்த திருக்கோலம் காண்பாரைக் கவரவல்லதாகும் "கலைகளிற் சிறந்தது நாட்டியக் கலையே" என்பது கலைஞர் முடிவு. சுழன்றாடிய நட்டத்தின் விசைக்

கூத்தக பிரிந்தும் பரந்தும், சுருண்டும் காணப்படும் விரிசடைத் திரட்சிகளின் மேல் சங்கையும் பிறையும், பாம்பும் கபாலமும் கொன்றை மாலையும் மிளிர்கின்றன. மூன்றாம் பிறை நுதலில் மூன்றுங்கண் - நுதற்கண் அமைந்துள்ளது. குனித்த இரு கரும் புருவங்களின் கீழ் அருளின்ப ஆனந்தத்தேன் சொரியும் திரு நோக்கங்கள் இன்பமளிக்கின்றன. இலக்கண நிறைவாகத் திகழும் முக உறுப்புக்களில் சங்க குண்டலம் பொருந்திய வலச்செவியும்; குழையணிந்த இடச்செவியும் சிவசக்தி நாயகரின் தத்துவத்தை விளக்குகின்றன. திருநீலகண்டத்தின் எழில் தோற்றத்தை மிகுதிப் படுத்தும் அழகிய நாற்கரங்களுள் வலமுன், வலப்பின் கரங்கள் முறையே அபயமுத்திரை அளித்தும், தமருகம் ஏந்தியும் திகழ இடமுன், இடப்பின் கரங்கள் முறையே குறுக்கிட்டு நீட்டி எடுத்த பாகத்தினைச் சுட்டும் கோலத்திலும், தீயகல் ஏந்தியும் திகழ்கின்றன. புலித்தோலை அரைக்கசைய நெறிப்புடைய கச்சை திகழ்கிறது. ஆடகப் பொதுவில் ஆடிடும் அறைகழல் திகழும் கால்களில் சிலம்பலம்பு சேவடியாக மன்றுளாடும் மலர்ப்பதமாக இனித்த முடைய எடுத்த நிலையில் நொசித்த இடது பாதம் அமைய உலகை இயக்கத்தை ஊன்று வித்தாடும் நிலையில் வலதுபாதம் முயலகனின் முதுகில் ஊன்றிய நிலையில் அம்பலக் கூத்தனார் நட்டம் பயின்று நாளும் உலகை வாழ்விக்கின்ற கோலம் இத்திருமேனியின் அமைப்பில் காணப்படுகிறது. இயற்கையின் இயல்பினை உள்ளவாறு காட்டும் வெற்றி முழுதுற அமைந்த இக்கலைத்திறம் ஆடற்கலைக் கழகு செய்வதாகும். அணுக்கத்தில் சிவகாமி அம்மையாரின் திரு மேனி இறையனாரின் எழிலார்ந்த ஆடலைக் கண்டு விம்மிதமுற்ற பெருங்காதல் நோக்கில் ஒசிந்த அன்பு நோக்குடன் ஒல்கிய தோற்றத்துடனுள்ளது. திருக்கழுத்திலே மங்கலிய சூத்திரம்; செங் கழுநீர் மலரேந்திய இடக்கரமும் ஒல்கிய இடையின் ஒருங்குதிகழும் வலக்கரமும் அழகிய மேலாடை அணிந்த தோற்றமும் அம்மையின் பெருந்திருக் கோலத்தை விளக்குமுறச் செய்கின்றன.

றிவியல் நிலை :-

அண்ட அண்ணலின் நெஞ்சத் தாமரையாகத் திகழும் தில்லைப் பதியை ஆகாசத் தலமென அறைகுவர். ஆம்; விண்ணீர்ப்பு விசை மிக்க உலகின் மையப் பகுதி இதுவே ஆகும் என்பது அண்மைக் கால அறிவியல் உண்மை. அண்டத்தைத் தம் ஞான அறிவினால் அறிந்த நம் முன்னோர் இவ்வாகாசத் தலத்து அணுவியக்கத்தை அறிவுறுத்தும் இறைவடிவில் நடராசர் திருமேனியைப் படைத்து விஞ்ஞானங்கடந்த மெய்ஞ்ஞானத்தை - சிவஞானத்தை - ஆன்மாக்

களுக்கு அறிவுறுத்துவதாக அமைத்த பெருமை நிறைந்ததித் திருமேனியாகும்.

ஆரியுண்ணுமுப்பு மேலாடும் பாம்பு வடிவில் காற்று, அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகிய அளப்பரிய ஆற்றல் வடிவான ஆனந்தஆகாசத்தை ஆம், ஆனந்த நடராசரை வழிபாடு செய்யும் தலப்பெருமை சிந்திக்கத் தக்கதாகும். அதனுல்தான், ஆதிசேடனும், பதஞ்சலியும் இத்திருநடம் வேண்டிக் கண்டு இன்புறுகிருர்கள் இங்கே. இதனை "நாகம் தொழ எழில் அம்பலம் நண்ணி நடம்பயில்வோன்" (திருவாசகம் 171) என விளக்குவர் வாதவூரர்.

**சமய நிலை :-**

தில்லை நாயகம், சிதம்பரநாதன், தில்லையாடி, நடராசன், நடேசன், சித்சபேசன், அம்பல வாணன் என்ற பல பெயர்ப் புகழாளரின் நடன காரணத்தை

"உண்ணிறைந்த ஞானத்தெழும் ஆனந்த
ஒருபெருந் தனிக்கூத்து"

(பெரியபுராணம் திருஞான சம்பந்தர் - 160)

எனச் சேக்கிழார் விளக்குவார்.

சித்அம்பரம் எனலாகும் ஞானப் பெருவெளியில் - சிதாகாசத்தில் நிகழுமிப் பெருங்கூத்துத் திருமேனி" பஞ்சகிருத்தியம்" எனப்படும் ஐந்தொழிலின் அறிகுறியாகத் திகழ்கிறது.

துடி படைத்தலையும்
அபயகரம் காத்தலையும்
தீயகல் அழித்தலையும்
ஊன்றிபாதம் மறைத்தலையும்
தூக்கிய திருவடி அருளலையும்

சுட்டுகின்றன.

இவ்வைந்தொழிற்கு மேற்பட்ட இயக்கம் வேறுண்டா? உண்டு. அதுவே "அலகில் கலையின் பொருட்கெல்லாம் ஆதிம் கழலாகும்" அம்பலவாணரின் அருட்கோலமாகும்.

தத்துவ நிலை :

அகண்ட பரிபூரணமாய் அப்பாலுக்கப்பாலாம் கந்தழியாக இருப்பினும் மனிதர்களுக்காக மனித வடிவிலேயே ஆனந்த நர்த்தமிடும் கருணைகரக் கடவுளரின் திருமேனி குறள் அரக்க முயலகனை மிதித்து நிற்கும் வலப்பாதத்தால் மனத்தகத்தே சிறுமைகளைத் தூண்டும் உணர்வுகளை ஒடுக்க வேண்டும் திறனை மானுடத்திற்குச் செப்புகிறது. பற்றுக்கு அடிப்படையான இச்சையுணர்வுகளை வென்றபின்

" அற்றது பற்றெனின் உற்றதுவீடு "

என்ற சூழல் அமைகிறது. அதுவே மானுடத்தின் செயற்பாடாதல் வேண்டும். பசு பதியை அடையப் பாசத்தைவிடல் வேண்டுமன்றோ? சதசத்து சத்தினை அடைய மலங்களைதல் அவசியமன்றோ? களைதற்கு சீலம், உரம்அமைத்தல் வேண்டும். அவ்வுரமே வலக்கால். அசத்து ஒடுக்கப்படுவதால் வருந்துமோ? இல்லை. முயலகனின் முகத்தில் துன்பே இல்லை. ஏன்! இது ஆனந்தநர்த்தனமன்றோ? ஐயிருதலையின் அரக்கர் கோமான் இமயமலையினை எடுக்கத் துணிந்தபோது அழுந்த ஊன்றிய ஊன்றுகால் அல்ல இது. இது கூத்தக்கால், ஆதலின் மென்மையும் பாவமுமின்றி வேறில்லை. எடுத்த பொற்பாதம் இலக்கச் செய்கையை எடுத்தியம்புகிறது. பற்றற்றான் பற்றினை உணர்த்துகின்றது. வீடுபேற்றின் திறவு கோலது. என ் நான் அருளாளர்களும் அறவோர்களும்

" இனித்தமுடை ய எடுத்தபொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்தமாநிலத்தே " எனவும்
" அரவாநீ ஆடும்போது நின்னடியின் கீழிருக்கவேண்டும் "

என்றும் பாடியுள்ளனர்.

இறைவனின் எளிவந்த அமைதியைச் சுட்டுவதாக முன்னிரு கரங்களும் திகழ்கின்றன. குறுக்கிட்ட தூங்கும்கரம் பற்றற்ற நிலையில் இறைவனது மாணடி சேரவிழையும் நாட்டத்தையும் அவ்வாறு

" மணமிசை யேகினன் மாணடிசேர்ந்தார்க்கு " இறைவன் " அஞ்சேல் என்று அருள் செய்வான் " என்பதனையும் அபயகரம் அருளுகின்றது. நஞ்சுண்ட கண்டம் நாதனரின் நயத்தக்க நாகரீக உணர்வை உலகத்தோர்க்கு உணர்த்தத் திகழ்கிறது. நட்டோர்க்காக அன்று நஞ்சினையுண்ட நாகரிகத்திலும் சிறந்த பிற நாகரிக

மூண்டோ? நாகரிகத்திலும் ஒப்புயர்வற்ற பெருமைதர வல்லதாகத் திகழ்வதே திருநீலகண்டப் ஆகும்.

நான்மறை பயிற்றிய செ[illegible]வச் செவ்வாய், அதனால் விளைந்த குமிழிட்ட புன்னகை, அகந்தெழு நகையை அரில்தப வுணர்ந்து சொன்னும் புலப்பாடு. வளைந்த விற்புருவங்களும் முப்புரம் எரித்த முன்மையவாகும். மோகத்தைக் கொன்று ஞானத்தைப் படைத்து - ஆம் காமனை எரித்து கந்தனைப் படைப்பது நெற்றிக் கண். பனித்த சடை இறைவனது தண்ணிய அருள்வழிகள் பவள மெனச் சிவந்த மேனியின் மீது பால்போன்ற நீற்றுப் படர்வு அனலெரியாக ஆடிடும் அண்ணலின் ஆற்றலை விளக்கவல்லது.

இவ்வண்ணம் ஆடிடும் அண்ணலின் திருமேனியினை ஆனந்த தில்லைக்கூத்தென விளக்குவார் திருமூலர் (திருமந்திரம் செய்யுள் 27[illegible], 2873) ஆனந்த நடனத்தின் மறுபெயர்களாக "சாந்த நடனம் புஜங்கத்ரேசபிதம்" என்பவை உள்ளன. தாருகவனத்து முனிவரின் செருக்கடக்கி, அவர்கள் ஏவிய கொடிய புலி, யானை, மான், நாகம், முயலகன் போன்றவற்றை அழித்து அணியாகச் சூடி வெற்றிக்களிப்பில் ஆனந்த நடனமாடிய சிவனாரின் அழகிய ஆட்டத்தினைக் காண விரும்பிய ஆதிசேடன், பதஞ்சலி, வியாக்ர பாதர், உமை ஆகியோர் விருப்பிற்கேற்ப தில்லையம்பலப் பொது வில் ஆன்ம கோடிகளும் கண்டு மகிழ எஞ்ஞான்றும் கூத்தக்கோனாகத் திகழும் அம்பலக் கூத்தனாரின் திருநடம் பற்றிய பல புராணச் செய்திகள் முருகு பெறத் திகழ்கின்றன. இவை சித்தம் அழகியார் சிவனாரின் அம்பலக்கூத்தத் திருமேனியால் கொண்ட முருகியலுணர்வாகும்.

அம்பலக்கூத்தன் திருமேனியின் அழகினை முழுதுற உணர்ந்த அறிஞர் ஆனந்த குமாரசாமி, ஆனந்த நட்டத்தின் தத்துவத்தை மூன்று பகுதிகளாக விளக்குவார்.

1) அண்டத்தில் நிகழ்வுறும் அனைத்து இயக்கங்களின் சந்த ஒழுங்கின் வடிவெனத் திகழ்வது. அதனுள் அண்டம் திருவாசி எனவும், நடராசர் திருமேனி இயக்கங்களின் நாத விந்து எனவும் விளக்கம் பெறும்.

2) மாயைப் பிடிப்பினின்றும் அளவற்ற ஆன்மகோடிகளை வீடுவிப்பதன் நோக்கே இந்நடனத்தின் நாட்டம்

3) ஆன்ம விடுதலையளிக்கும், வீடுபேறு நல்கும் திருநடன மன்று - சிதம்பரம் ஒவ்வொருவரின் இதயகமலமே என்பதாகும்.

இத்தத்துவ விளக்க அடிப்படையில் முருகியலுணர்வின் பாலகப் பட்ட ஆனந்த குமாரசாமி அவர்கள் இவ்வம்பலக் கூத்தனாரின் திருமேனி விஞ்ஞானம், சமயம் கலை என்ற முப்பாற் பிரிவில் ஒன்றிய வடிவெனக் காட்டுவார்.

இவ்விளக்கமே தில்லைபம்பலக் கூத்தரின் திருமேனிபுணர்த்தும் முருகிபலுணர்வின் முழுமையைக் குறிப்பதாகும்.

அறிவியலாளரின் பார்வைக்குப் பேரண்ட, அணுவியக்க, அறிவியலின் குறியீடாகவும் சமய ஞானியர்க்கு அப்பாலுக்கப் பாலாம் ஞானானந்த விடுபேற்றின் தத்துவக் குறியீடாகவும் கலைஞருக்கோ ஒப்புயர்வில்லா உயிர்ப்பமைந்த கலைப்படைப் பெனவுந் திகழ்வது. கண்ணுக்கழகையும் கருத்துள் இன்பத்தையும், சமயத்துள் நாட்டத்தையும் தத்துவத்துள் விஞ்ஞான அறிவியலை யும் வளர்ப்பதுடன், இயலாகவும், இசையாகவும், நாடகமாகவும் திகழ்ந்திடும் இத்தில்லையம்பலக் கூத்தரின் திருமேனியை "முத்தமிழ் நாயகம்" எனின் அதுவே சாலும்.


Phone No : 222 — "Tel Add. "JEWELLERY"
PT.N..G. S. T. No: 209126. — Post Box. No. 14
I No. 8/77. — Residence Phone No: 622

தரம் மிக்க தங்க நகைகளுக்கு

**ஸ்ரீ நடராஜ விலாஸ்**

**ஜுவல்லரி ஹால்**

**சிதம்பரம்**

முகவரி

ச. ரெத்தினசாமி செட்டியார் சன்ஸ்

உரிமையாளர்கள் :

நடராஜ விலாஸ் ஜுவல்லரி ஹால்

26, 27, 28, கடைத்தெரு, சிதம்பரம்

தென்னார்க்காடு மாவட்டம் – 608 001

# ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

( மாதப் பத்திரிகை )

பரபரப்பும் ஆரவாரங்களும் நிறைந்த தற்காலச் சூழ்நிலையில், மக்களுக்கு மனச்சாந்தியைத் தரும் அருமருந்தாக இந்தப் பத்திரிகை விளங்குகிறது.

தற்கால மக்களின் ஆன்மிகமறுமலர்ச்சிக்கு ஏற்ற வகையில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் குரலாக ஸ்ரீராம கிருஷ்ண விஜயம் ஒலிக்கிறது.

உங்கள் உள்ளம் உயர, நீங்கள் மேன்மையுற, அவசியம் படிக்க வேண்டிய பத்திரிகை இது.

உள்ளத்தைப் பண்படுத்தும் இந்து மதத்தின் சிறந்த கருத்துக்கள் உங்கள் குடும்பத்தினருக்கு எப்போதும் கிடைக்கச் செய்ய ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் பத்திரிகை ஆயுள் சந்தா தாரராகச் சேருங்கள்.

**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருடச் சந்தா | ரூ. 22 |
| ஆயுள் சந்தா | ரூ. 250 |
| தனிப் பிரதி | ரூ. 2 |

---

| | | தொலைபேசி |
|---|---|---|
| ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் காரியாலயம் | | |
| | ஸ்ரீராமகிருஷ்ண மடம் | 71959 |
| மயிலாப்பூர் : | சென்னை600 004. | 71231 |

# திருவிசைப்பா திருப்பல்லாண்டுகளின் இசை

ஞானா குலேந்திரன்,
இணைப்பேராசிரியை, இசைத்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

கோயில் வழிபாட்டில் பஞ்சபுராணம் என ஓதப்பெறும் திருமுறைப் பாடல்கள் ஐந்தினுள் திருவிசைப்பாவில் ஒன்றும், திருப்பல்லாண்டில் ஒன்றும் பாடப்பெறுவது வழக்கமாகி விட்டது. இவ்விரு பாடல் வகைகளும் பன்னிரு திருமுறையுள் ஒன்பதாம் திருமுறைக்குரியவை.

திருமாளிகைத் தேவர் முதல் சேதிராயர் ஈருகவுள்ள அருளாசிரியர் ஒன்பதின்மரும் திருவாய் மலர்ந்தருளிய இருபத்தெட்டுத் திருப்பதிகங்களைத் திருவிசைப்பா என்றும், சேந்தனர் பாடிய பல்லாண்டிசையினைத் திருப்பல்லாண்டு என்றும் வழங்குதல் மரபு. திருமுறை கண்ட புராண ஆசிரியர் இருபத்தொன்பது பதிகங்களையும், திருவிசைப் பாமாலை என ஒன்ருக வழங்குவர் இவற்றிலுள்ள முந்நூற்றெருரு பாடல்களும் தேவாரப் பாடல்களைப் போன்று இசை நலம் வாய்ந்தவை.

தேவாரப் பதிகங்களுக்குப் பண் (இராகம்) குறிக்கப்பெற்றமை போல், திருவிசைப் பாக்களுக்கும் பண்கள் குறிக்கப் பெற்றுள்ளன. காந்தாரப் பண்ணில் இரு பதிகங்களும், புறநீர்மைப் பண்ணில் மூன்று பதிகங்களும், சாளரபாணிப் பண்ணில் ஒரு பதிகமும், நட்டராகப் பண்ணில் ஒரு பதிகமும் இந்தளப் பண்ணில் ஒரு பதிகமும், பஞ்சமப் பண்ணில் இருபத்தொரு பதிகமுமாக மொத்தம் ஆறு பண்களில் திருவிசைப்பா மாலைப் பதிகங்கள் அமைகின்றன.

இருந்தும், அவ்வப் பதிகங்களுக்குரிய பண்களில் இன்று பாடல்கள் பாடப் பெருது பெரும்பாலும் அவை ஆனந்தபைரவி, கேதாரகௌளை, சண்முகப்ரியா ஆகிய இராகங்களில் பாடப்

பெற்று வருகின்றன. பழந்தமிழ்ப் பண்களில் இவற்றைப்பாடும் முறை வழக்கொழிந்து போனமையே இதற்குக் காரணமெனலாம் பண்ணிசை மறுமலர்ச்சி பெற்றுவரும் இக்காலத்தில், அருளாசிரியர்கள் அன்று பாடிய பண்களின் உண்மையான இசைகளைக் கண்டறிந்து அதன்படி பாடுதல் நலம். இசை வளத்திற்கும், இறை இன்பத்திற்கும் இது உதவும்.

**பண்களின் இசை:**

பழந்தமிழகத்தில் பண்களை (இராகம்) நூற்றுமூன்று என வரையறை செய்திருந்தனர். இப்பண்கள் பற்றிய பல செய்திகளைப் பழந்தமிழ் இலக்கியங்களாலும், அவற்றின் உரைகளாலும், திவாகரம், பிங்கலந்தை முதலாய நிகண்டு நூல்களாலும், பஞ்சமரபு என்னும் இசை இலக்கண நூலாலும் அறியலாம். ஆயினும் இப்பண்களின் இசைமுறை, அல்லது பாடுமுறை பற்றித் தெரிந்து கொள்ள, மேற்சொன்ன நூல்கள் தரும் செய்திகள் போதவில்லை. இந்நிலையில் ஓதுவாமூர்த்திகளால் தலைமுறை தலைமுறையாகப் பாடப்பெற்று வரும் தேவாரப் பண்ணிசை முறையால் இற்றை நாள்வரை 24 பண்களின் இசைமுறை ஓரளவு பாதுகாக்கப் பெற்றுவந்துள்ளன.

இவற்றில் காந்தாரம், புறநீர்மை, நட்டராகம், இந்தளம், பஞ்சமம், ஆகிய ஐந்து பண்களில் திருவிசைப்பாமாலைப் பாடல்கள் இருக்கக் காணலாம். திருவிசைப் பாமாலையில் காணப்படும் சாளரப்பாணிப் பண் ஒன்று மட்டுமே தேவாரங்களில் இல்லை.

தமிழர் கண்ட பண்ணிசை முறை, கருநாடக இசை என அழைக்கம்பெற்ற காலம் முதல் (கி.பி.13 ம் நூற்றுண்டுக்குப் பின்) பண்கள் பெயரளவில் மாற்றம் பெற்றிருக்கின்றன. இதனுல் தற்காலத்தில் வழக்கிலிருக்கும் கருநாடக இராகப் பெயர்களைக் கொண்டே பழம்பண்களை இனங்காணும் முறை இன்று தமிழகத்தில் நிலவிவருகிறது.

சென்னைத் தமிழிசைச் சங்கத்தார் சென்ற பல ஆண்டுகளாக நடத்திய பண்ணுராய்ச்சிகளினுல், சில பண்களுக்கு நேரான கருநாடக இராகங்கள் தெளிவாக அறியப்பட்டுள்ளன. செவ்வழிப் பண்ணிற்குரிய இராகம் யதுகுலகாம்போதி, காந்தாரபஞ்சமப் பண்ணிற்கான இராகம் கேதாரகௌளை என்பவை ஓரிரு எடுத்துக் காட்டுகள். அதேபோல, சில பண்களுக்கிடையேயான நுட்ப சுருதி வேறுபாடுகளைத் தெளிவாகக் காண முடியாத நிலையில் ஒன்றிற்கும் மேற்பட்ட பண்கள், ஒரு இராகத்தில் பாடும்நிலை இன்று

நிலவுகிறது. தக்கேசி, தக்கராகம் ஆகிய இருபண்களும் காம்போதி இராகத்திலும், கொல்லி, கொல்லிக்கௌவாணம், பியந்தை, பியந்தைக்காந்தாரம் ஆகிய நான்கு பண்களும், நவரோசு இராகத்தில் இன்று இசைக்கப்பெற்று வருகின்றன.

74 15-5-78

இந்நிலையிலும், திருவிசைப்பாமாலைப் பண்களின் இசையினை ஓரளவு கண்டறியலாம்.

அ) புறநீர்மைப் பண் திருவிசைப் பாக்களின் இசை

''கணம் விரி'' ''கலைகள் தம் பொருளும்'', ''துச்சான'' எனத் தொடங்கும் மூன்று திருவிசைப்பா பதிகப் பாடல்களும் புறநீமைப் பண்ணிற்குரியவை. இப்பண்ணிற்கான தற்காலப் பெயர் பூபாளம் இது சரிகபதச் - ச்தபகரிச என்ற ஆரோசை அமரோசையைக் கொண்டு மாயமாளவகௌளை (15-வது மேளம்) இராகத்தின் சேய் இராகமாக விளங்குகிறது. வைகறைப் பொழுதிற் படற்குரிய இனிய இராகம் இது. கோயில்களில், திருப்பள்ளியெழுச்சியின் போது இசைக்கப்பெறும் இராகம் பூபாளமே.

ஆ) காந்தாரப்பண் திருவிசைப் பாக்களின் இசை

''இணங்கிலா வீசன்'' ''நீரோங்கி வளர்கமலம்'' எனத் தொடங்கும் இரு பதிகங்களும் காந்தாரப் பண்ணில் அமைந்துள்ளன. காந்தாரப் பண்ணில் அமைந்த தேவாரப் பாடல்கள் இன்று நவரோச இராகத்தில் பாடப்பெற்று வருகின்றன. ஆயினும் பியந்தைக் காந்தாரம், கொல்லி, கொல்லிக் கௌவாணம் ஆகிய பண்களுக்குரிய தேவாரப் பாடல்களும் நவரோசு இராகத்தில் பாடி வருவது கவனிக்க வேண்டியுள்ளது. நான்கு பண்களை ஓரே இராகத்தில் பாடுவதை ஏற்பது ஆராய்ச்சி முறைக்குப் பொருத்தமானதன்று. இந்நான்கு பண்களின் தனிச்சாயல்களைக் கண்டறிந்த பின்னரே காந்தாரப் பண்ணிற்கான இராகம் நவரோசு தானா என்பதை முடிவு செய்யலாம்

இ) இந்தளப் பண் திருவிசைப்பாக்களின் இசை

''அல்லாய்ப்பகலாய்'' என்னும் முதற் குறிப்புடைய திருவிசைப்பா பதிகம் இந்தளப் பண்ணிற்கு உரியது. இப்பண்ணிற்குரிய தற்கால நேர் இராகம் மாயாமாளவகௌள. இது சரிகமபதநிச் - ச்நிதபமகரிச என்னும் ஆரோசை அமரோசையுடைய 15-வது எண் பெற்ற தாய் இராகம். பக்திச் சுவையும், கருணைச் சுவையும் நிறைந்த இத்த இராகம் எவ்லா நேரத்திலும் பாடற்

குரியது. தென்னக இசை பயில்வோர் எவரும் முதலிற்பயில வேண்டிய சுர வரிசைக் கோர்வைகள் (சரளி வரிசை, ஜண்டை வரிசை முதலியன) மாயாமாளவகௌள இராகத்தில் அமைந்திருப் பதிலிருந்து இந்த இராகத்தை எளிமையாகப் பயின்று அறியலாம் என்பது தெளிவு.

## ஈ) நட்டராகப் பண் திருவிசைப்பாக்களின் இசை

"பாடிய பவளமால்வரை' என்னும் முதற் குறிப்புடைய திருவிசைப்பா பதிகம் நட்டராகப் பண்ணில் அமைந்துள்ளது. நட்டராகப் பண்ணில் அமைந்த தேவாரப் பாடல்களும் சாதாரிப் பண்ணில் அமைந்த தேவாரப் பாடல்களும் இன்று பந்துவராளி இராகத்தில் பாடப்பெற்று வருகின்றன. ஆகவே பந்துவராளி இராகத்திற்குரிய பண் நட்டராகமா, சாதரியா என்பதில் ஐயமெழுகிறது. இவ்விரு பண்களிலமைந்த தேவாரப் பாடல்களின் பாடுமுறையிலுள்ள மிக நுட்பமான வேறுபாடுகள் கண்டறியப் பட்டால், நட்டராகப் பண்ணிற்குரிய நேர் இராகம் பந்துவராளி தானா என்பதில் தெளிவு ஏற்படும்.

## உ) பஞ்சமப் பண் திருவிசைப் பாக்களின் இசை

இருபத்தெட்டுத் திருவிசைப்பா பதிகங்களில் இருபதும், திருப்பல்லாண்டுப் பதிகமும் பஞ்சமப் பண்ணில் அமையக் காண லாம். ஆக இருபத்தொன்பது பதிகங்களில் இருபத்தொரு பதிகங்கள் பஞ்சமப் பண்ணிற்குரிவையாகின்றன.

இச்செய்தியை.

...... பஞ்சமம் பாடியாடுந்
தெள்ளியார் கள்ளந்தீர்ப்பார் திருச்செம்பொன் பள்ளியாரே'
(4. 29-3)

என்ற அப்பர் வாய்மொழியோடு ஒப்பு நோக்குகையில், சிந்தை தெளிந்து இறைவனைப் போற்றுவதற்குப் பெரிதும் ஏற்புடைய பண், பஞ்சமம் என்பது புலனாகிறது. இப்பண்ணிற்குரிய தற்காலப் பெயர் ஆஹிரி இராகமாகும். சரிச கம பதநிச் - சநிதாபமாகரிச என்ற ஆரோசை அமரோசையுடைய இந்த இராகம் 14 - வது மேளமாகிய வகுளாபர்ணத்தின் சேய் இராகமாகும். இந்த இராகத்தில் பல நுட்ப சுருதிகள் உள. சோகச் சுவையுள்ள இந்த இராகம் காலையில் பாடுவதற்கு ஏற்றதல்ல. இரவில் மூன்று வது சாமத்திலும், சூரியன் உதயமாவதற்கு முன்பும் இந்த

இராகத்தைப் பாடலாம். இரவில் அர்த்தசாம நிகழ்ச்சியின் இறுதியில் திருவெண்காடு கோயிலில் இப்பொழுதும் நாகசுரக்காரர் ஆஹிரி இராகத்தை இசைத்தும் வழக்கமுண்டு.

### ண) சாளரபாணிப் பண் பதிக இசை

"முத்து வயிரமணி" எனத் தொடங்கும் திருவிசைப்பா பதிகம்ஒன்று மட்டுமே சாளரபாணிப் பண்ணில் அமைந்துள்ளது பழந்தமிழர் கண்ட 103 பண்களில் 94 எனும் எண் பெற்ற பண் சாளரபாணி. இதுவரை கிடைக்கப் பெற்றுள்ள தேவார, பிரபந்த பாடல்களிலும், மற்றும் பண் குறிக்கப் பெற்ற பழந்தமிழ்ப் பாடல்களிலும் காணப் பெறாத பண் இது.

திருவிசைப்பா பாடல்கள் எல்லாவற்றையும் பொதுவாக ஆனந்தபைரவி இராகத்தில் பாடப்பெறுவது போல், நெடுங்கால மாகச் சாளரபாணிப் பண்ணிற்கு உரிய பதிகப்பாடல்களும் ஆனந்த பைரவி இராகத்தில் பாடப்பெற்று வருகின்றன. இது ஒரு பழைய இராகம். நாட்டுப்புறங்களில் இந்த இசையை அதிகம் கேட்கலாம் தாலாட்டு, ஊஞ்சல் பாட்டு ஆகியவை ஆனந்தபைரவியில் சிறப் பாக அமையக் காணலாம். ஆகவே, பழந்தமிழ் சாளரபாணிப் பண் தான் பின்னர் ஆனந்த பைரவி என அழைக்கப்பட்டிருக்க லமோ என்று எண்ணத்தோன்றுகிறது. சகரி கம பதபச் - ச்நிதப மகரிச என்ற ஆரோசை அமரோசையோடு 20-வது மேளமாகிய நடபைரவியின் சேய் இராகமாக ஆனந்தபைரவி விளங்குகிறது. நுட்ப சுருதிகளையும் துய்மிய சுரங்களையுமுடைய இந்த இராகம் எப்பொழுதும் பாடத்தக்கதாகும்.

### பாடல்களைப் பாடும் அமைதி:-

தெய்வத்தைப் போற்றிப் பாடும் பாடல்கள் சுத்தாங்கமாக வும், பண்ணுங்கமாகவும் பாடலாம். தாளக் கட்டுப்பாடு இல்லாமல் பாடுபவர் தம் உணர்ச்சிப் பெருக்குக்கும், கற்பனைச் செறிவிற்கும் ஏற்பப், பாடலுக்குரிய பண்ணின் இசையினை விரித்தோ, சுருக்கி யோ பாடற்பொருள் சிதையாமல் பாடுவது சுத்தாங்க முறையா கும். பாடலின் சந்த அமைப்பினைக் கொண்டு ஒரு தாளக் கட்டுப் பாட்டுள் அமையப் பாடலைப் பாடுவது பண்ணுங்கமுறையாகும். திருவிசைப்பா, திருப்பல்லாண்டுப் பாடல்கள் இவ்விருமுறையிலும் பாடுவதற்கு ஏற்றவை, பாடும் சந்தர்ப்பத்திற்கும், பாடுபவர் மனநிலைக்கும் பொருந்தப் பாடும் அமைதியைத் தீர்மானித்துக் கொள்ளலாம்.

# ஊழ்வினை உருப்ப ஒட்டார்

வித்துவான் தா. குருசாமி தேசிகர், மதுரை.

**முன்னுரை :-**

ஊழ்வினை வலிமையானது என்பது திருவள்ளுவர் கண்ட முடிவு வலிமையினை விளக்க வந்த திருவள்ளுவர் "ஊழிற் பெரு வலியாவுள - மற்றொன்று சூழினும் தான் முந்துறும்" என்று தமது முடிவினை இலச்சினையிட்டுச் சென்றிருக்கிறார். ஆள்வினையை விளக்கி முடிவு கூற வந்த போது, திருவள்ளுவர்க்கு' ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித் - தாழாது உஞற்றுபவர்" என்று சிந்தனை முகிழ்க்கிறது; ஆய்வோம்.

**முரண்பாடா? விளக்கமா?:-**

ஊழின் வலிமை பெரிது; எந்த உபாயங்களாலும் வெல்ல முடியாது என்று கண்டு கொண்ட, ஓர் உண்மை - தாழாது ஆள் வினை மேற்கொள்பவர் மட்டும் "ஊழை" - அதன் பிடறி பிடித்து - அரிமாவை - களிற்றை - "வல்லான்" ஒருவன் அடக்குமாறு போல அடக்குவர் என்று திருக்குறள் சிந்திக்கிறது. முரண்பாடாகத் தோற்றும் இருவேறு கருத்துகளும் விளக்கமாக நின்று முரண் பாட்டை ஒழிக்கின்றன. ஊழை வெல்ல முடியாது என்று கூறாமல் - "ஊழ்" வலிமையானது என்றார். வல்லவன் ஒருவனால் அதன் வலிமையையும் புறங்காணலாம் என்றார். இதன் தொடர்பை இலக்கியங்களால் மேலும் சிந்திக்கலாம். அதுவும் ஓரளவே!

**ஊழ்வலிமை:-**

நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் "ஊழ்வினை உறுத்துவந் தூட்டும்" என்ற நியதியைப் பின்னிக் காட்டுகிறது; மார்க் கண்டேயன் வரலாறு ஊழின் வலிமையைப் புறங்கண்டதாகக் கந்த புராணம் கழறுகிறது. அறிவியல் முறையிலும் - "உழப்பின் வாரா உறுதிகள் உளவோ!" என்று வினவுகின்றோம்; "உண்டோ! முயன்றால் முடியாப் பொருள்" என்று அணி இலக்கணம் பேசுகிறது. கால் இல்லாதவர் செயற்கைக் கால் பெறமுடிகிறது. கண் இல்லாதவர் கர ஒளியால் கண்ணில்லாத ஊழின் வலிமையைப்

புறங்காண்கின்றனர்; "ஹெலன்கெல்லர்" பிறப்பிலேயே ஊன முற்றவர்; காண - பேச - நடக்க முடியாத அவர் ஊழினைப் புறங் கண்டு எல்லா நலங்களையும் தமது ஆள்வினையால் பெற்றுள்ளார். ஆதலின் ஊழ்வினை வலிமையானது என்பதனை எல்லோரும் ஒப்புக் கொள்வது போலவே, அதன் வலிமையையும் "தம்பிக்க வைக்க முடியும்" என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும் இது உலகியல்.

எடுத்துக் காட்டு:-

உலகியல் விதியை வெல்ல முயன்கின்றோம், அதில் ஓரளவே முயற்சி வெற்றி பெறுகிறது. அருளாளர்களின் வாழ்வியலும் அருள்வாக்கும் ஊழ்வினையை வெல்ல உறுதி தருகின்றது இறைவனை மறவாது வழிபடுதலே செயத்தக்க ஆள்வினை. இதனைப் பலரும் செய்யாமல் கெடுகின்றனர்; என்ன உலகம்! விதிவந்தால் வெந்ததைத் தின்று சாவோம் என்ற பழமொழியைப் புறங்காண வேண்டும். தேவார முதலிகள் மூவரும் ஊழ்வினையை வென்று நமக்கு வாழும் வழி காட்டிய வள்ளல்கள். இவ்வள்ளல்கள் வழங்கிய திருமுறைப் பாடல்களில் ஒன்று சுந்தரமூர்த்தி சுவாமி கள் அருளிய பாடல். திருவாஞ்சியம் என்னும் தலத்துத் தேவாரம் ஊழ்வினை நலிவிலிருந்து தப்ப வழி காட்டுகிறது; வள்ளல்கள் தானே வழிகாட்டி வாழவைப்பர். வலியவனின் நலிவை வலியனா லேயே நீக்க முடியும்.

நலிய ஒட்டார்:-

நன்மைகளை ஒழித்தலே நலிதல் எனப்படும். இந்த ஒழித்தல் தொழிலை வலிமையுடன் செய்வது ஊழ்வினை. இதனை உணர்ந்து திருவாஞ்சியத்து இறைவனை வணங்கினால் நம்மிடத்து ஊழ்வினை நலிய விடமாட்டார். இதனைச் சுந்தரமூர்த்தி நாயனார், நம் இறைவர் தீயவரோடு மாறுபடுபவர்: உமையோடு கூடியவர்; தம்மையடை யாதவரிடத்தில் வருவதும் இல்லை; திருவாஞ்சியத்தில் எழுந்தருளி யுள்ள இறைவர் ஒப்பற்றவர்; தம் அடியவரை ஊழ்வினை வந்து நலிய ஒட்டாது ஒருதலையாகக் காப்பர் - என்ற கருத்துடன் கீழ்க் கண்ட பாடல் விளங்குகிறது.

பொருவனார் புரிநூலர் புணர்முலை உமையவளோடு
மருவினர் மருவார் பால் வருவதும் இல்லை நம்மடிகள்

திருவனர் பணிந் தேத்தும் திகழ்திருவாஞ்யத் துறையும்
ஒருவனர் அடியாரை ஊழ்வினை நலிய ஒட்டாரே

— சுந்தரர் — 7-ம் திருமுறை

முடிவுரை :-

இறைவன் ஒருவனே ஊழ்வினை வலிமையைக் கெடுக்கக் கூடியவர். இறைவனை முன்னிலைப்படுத்திச் செய்கின்ற வழிபாடே உயிர்கள் செய்யத்தக்கது. "மருவுதல்" செய்பவரையே இறைவனும் விரும்பி வந்து அருள்பாலிப்பர். இறைவனை வணங்கும் ஆள்வினையில் - முயற்சியில் இடையீடு கூடாது; இடையீடுபட்டால் "நம் அடிகள் வருவதும் இல்லை" என்றுர். இவனல் ஊழ்வினை தமது வலிமையை எப்போதும் "இழக்காது" என்பதும், வினையுடையார் இறைவனை மருவும்போது வந்து முன்னின்று அவ்வூழின் "நலி"விலிருந்து காப்பாற்றுகின்றுர் என்பதும் அறியத்தக்க செய்தியாகும்.

# ஆலயபூஜைப் படிக்காசு நிதி

## நன்கொடை அளித்த அன்பர்கள் விபரம்

| | |
|---|---|
| திரு/திருமதி முன் இருப்பு | 26589—15 |
| வேலப்ப பிள்ளை, ஸ்ரீவைகுண்டம் | 57—00 |
| K மதியன், அருவங்காடு, நீலகிரி | 100—00 |
| S. V. S. தங்கப்ப செட்டியார், மயிலாடுதுறை | 5—00 |
| S. மாணிக்கம், மயிலாடுதுறை | 5—00 |
| உக்கரை, V. கைலாசம் | 5—00 |
| ஆக ரூ | 26761—15 |

| | |
|---|---|
| சேங்கனூர் ஸ்ரீ சத்யகிரீஸ்வரர் ஆலயச் செலவு | 61—50 |
| பாணதுறை ஸ்ரீ பாணபுரீஸ்வரர் ஆலயச் செலவு | 75—00 |
| தலச்சங்காடு ஸ்ரீ சங்காரண்யேஸ்வரர் ஆலயச் செலவு | 91—00 |
| திருந்து தேவன்குடி ஆலயச் செலவு | 90—00 |
| ஆக ரூ | 317—50 |

# அப்பர் கண்ட இராமர்

வெ. தமிழரசி. எம். ஏ, (எம்., ஃபில்,)
மன்னார்குடி.

இலக்கிய காலகட்டங்களில் குறிப்பிடத்தக்கவை சங்ககாலமும் பக்திஇயக்ககாலமும், நீதிநூல் காலமும்ஆம். இவற்றுள் நடுவண தாகியபக்தி இயக்கக் காலத்தில் சைவநாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களும் தோன்றி எண்ணிறந்த பக்திப் பாக்களைப் பாடிப் பரவினர். நாயன்மார்களுள் நால்வர் என்னும் எண்ணுப்பெயர் பெற்றுச் சிறப்பிக்கப் பெறுபவர்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோர். அதிகப்பாடல்களைப் பாடியவர்கள் என்ற வகையிலும், பக்திச்சுவையும், இலக்கிய நலமும் மிக்கபாடல்களைப் பாடியவர்கள் என்ற வகையிலும் மேற்கூறிய நால்வரும் சிறப்பிக்கப் பெறுகின்றனர். திருமுறைகளைத் தொகுத்து வகுத்த நம்பியாண்டார் நம்பியவர்கள் இந்நால்வரது பாடல் தொகுப்புக்களை, முதல் எட்டு திருமுறைகளாக வரிசைப் படுத்தியுள்ளார். காலத்தால் முற்பட்ட திருமூலரின் திருமந்திரப் பாடல்கள் பத்தாம் திருமுறையாகப் பின்னல் இணைக்கப்பட்டுள்ளது கொண்டு இவர்கள்தம் பாடற்சிறப்பு உணரலாம்.

சைவமும் வைணவமும் இந்நிலத்தில் வளர்ந்தவை. இந்தியச் சமயங்களின் இருகண்களெனத் திகழ்பவை இவ்விருசமயங்களே. சைவத்தின் தலைமைத்தெய்வம் சிவன். சிவம்ஒன்றே பரம்பொருள் என்பது சித்தாந்தம். வைணவர்கள்தம் தலைமைத்தெய்வம் திருமால்.

சிவன் உயிர்கட்கு உபகாரம் செயற்தற் பொருட்டு எவ்விடத்தும், எக்காலத்தும், எவ்வகை வடிவும் எடுப்பான்என்பது சித்தாந்தக் கருத்து. அவ்வாறே திருமால் உயிர்களைக் காக்கும் பொருட்டு வெவ்வேறாய்ப் பிறப்பெடுக்கிறான் என்பது வைணவக் கருத்து. இவ்விரு சமயங்களும் ஒரே காலகட்டத்தவை என்ப தற்குச் சான்றாக இருபால் இலக்கியங்களிலும் இருவேறு தெய்வங்கள் பற்றிய புராணச்செய்திகள் இடம்பெற்றுள்ளதைக் கொள்ளலாம்

சைவக்குரவர் நால்வருள் திருநாவுக்கரசர் பக்திப்பாமாலை சூட்டி இறைவனை வழிபட்டதோ டன்றி உழவாரம் முதலான தொண்டு பலவும்செய்து வழிபட்டவர். சைவர்கள் போற்றும் நால்வகை நெறிகளில் சீரியதான சரியைத் தொண்டினைத் தன் நெறியாகக் கொண்டு திகழ்ந்தவர். மிகக்குறுகிய காலமே சைவத்துறையினராக வாழ்ந்தபோதிலும் அக்காலத்திற்கும் மிஞ்சிய தொண்டு புரிந்தவர் அப்பர். தமிழும், வடமொழியும் நன்கு கற்றுத் தேர்ந்தவர். தாளத்துடன் கூடிய இசைப்பாக்களும், தாள மின்றி அமைந்த தாண்டகப்பாக்களும் கொண்டவை அவரது பக்திப்பாக்கள். அப்பர், தாண்டகவேந்தர் என்பன அவர் தம் வேறு பெயர்கள்.

நாவுக்கரசர் தம் திருமுறைகளான நான்கு, ஐந்து, ஆறு ஆகிய திருமுறைகளில் இறை, உயிர் பற்றிய கொள்கைகளும் பெரும்பான்மை இடம் பெற்றிருப்பினும் இலக்கியக் கோட்பாடுகள் பலவும் பயின்று வந்துள்ளன.

அப்பர்தம் பாக்களில் இறைவனின் இயல்பும் திறனும் விளக்கும் முகமாகச் சிவபெருமானின் அட்டமாசித்திகள் விளக்கிப் பேசப்படுகின்றன. ஞானசம்பந்தர் போன்று இயற்கை நலம் விளங்கப் பாக்களைப் புனையாத அப்பர் இறைக் கருத்துக்களைத் தெளிவுறுத்தும் பாக்களையே அதிகம் பாடியுள்ளார்.

அவ்வகையில் ஈசனைத்தம் இறைவனாகப் போற்றித் திருமால் முதல் தேவர்கள் பலரும் வணங்கும் செய்திகளும், அவ்வண்ணம் வணங்கியவர்களுக்கு ஈசன் அருள்செய்த சிறப்பும் விளக்கமுறப் பலஇடங்களில் பேசப்படுகின்றன.

திருமாலின் பல்வேறு பிறப்புக்களில் ஒன்றாக " இராமர் " பிறப்பும் பேசப்படுகின்றது. அங்ஙனம் பிறப்பெடுத்த இராமர் ஈசனைவழிப்பட்ட இடம் இராமேச்சுரம். இராமர் ஈசனை வழிபட்ட வரலாற்றைத் திருமுறைப்பாக்கள் பலவும் எடுத்தியம்புகின்றன. எனினும் அப்பர்தம் பாக்களில் இராமர் பற்றிய வரலாறு மற்ற திருமுறைகளில் அல்லாத சிறப்பிடம் பெறுகின்றன.

திருமுறைகளில் இராமாவதாரம் பற்றிய செய்திகளன்றித் திருமாற்பேறு என்னும் சிவத்தலத்தில் திருமால் சிவனை வழிபட்ட வரலாறும் குறிப்பிடப்படுகின்றது. இத்தலத்தில் ஆயிரம் மலர்கள்

கொண்டு ஈசனைத் திருமால் வழிபடுங்கால் ஈசன் ஒருமலரை மறைக்க, அம்மலர்க்கீடாகத் தன் கண்ணையே யிடந்து அர்ச்சித்து ஈசனின் பேரருளைப் பெற்ற வரலாறு திருமாற்பேறு தலப்பதிகங் களில் குறிப்பிடப்படுகின்றது

இவ்வரலாற்றை அப்பர்தம் திருமுறைகளில் முதலாவதான நான்காம் திருமுறையில் நூற்றி நாற்பத்துமூன்றும் பாடலிலும், நானூற்று எண்பதாம் பாடலிலும் விளக்கமாகக் காணலாம்.

தடமல ராயிரங்கள் குறைவொன் றதாக
நிறைவென்று தன்க ணதனல்
உடன்வழி பாடுசெய்த திருமாலை

என்பது அப்பர் வாக்கு

திருமாற்பேறு மட்டுமன்றித் திருவிராமேச்சுரம் நாயன்மார்கள் வலம்வந்த திருத்தலமாகும். அத்தலப்பெருமை கூறும்பொருட்டும் அங்குச்சென்று ஈசனை வழிபட நம்மனோரை ஆற்றுப்படுத்தும் பொருட்டும் நான்காம் திருமுறையின் அறுபத்தோராம் பதிகத்தை விளக்கமுறப் பாடியுள்ளார் அப்பர்.

ஏனைய திருமுறை ஆசிரியர்கள் போல் இராமர் வழிபட்ட தலம்என்ற மட்டோடு கூறாது இராமர்தம் மறத்தன்மை உணர்த்தும் முகமாக அப்பதிகப் பாடல்கள் அமைந்துள. சைவத்திற்கும் வைணவத்திற்கும் ஒன்றுபட்ட கருத்துகள் சில இருப்பினும் வேறுபட்ட கருத்துகள் பல உள. எத்தகுவேற்றுமை இருப்பினும் சிவத்தொண்டின் சீலராக இருந்து வாழ்ந்த அப்பர் இராமர் தம் பெருமையும், சிறப்பும் விளக்கியுள்ள போக்கு எண்ணி வியத்தற் குரியதாகும்.

**இராமர் பற்றிய அப்பர் வாக்குகள்:**

பல தலங்களிலும் சென்று சிவவழிபாடு செய்துவரும் அப்பர் பெருமான் திருவிராமேச்சுரம் சென்று ஆங்கு இலங்கிவரும் இராமர் வழிபாடு செய்த சிவலிங்கத்தைத் தானும் பூசித்து வழிபாடு செய் கின்றார். ஏனைய தலங்களுக்குச் சென்று அத்தலம் பற்றிய சிறப்பும், சிவபெருமானின் திருவிளையாடல்கள் பற்றியும். தான் செய்த தவறெண்ணி வருந்தியும் பாடிய அப்பர் இத்தலத்தின்கண் தனக்கு முன்பாக அச்சிவலிங்கத்தை வழிபட்ட பக்தனொருவனின் புகழ்பாடி இருப்பது மாறுபட்டதொரு அமைப்பாகும். அங்ஙனமாய் அப்பரடிகள்,

1. பாசமுங் கழிக்ககில்லா வரக்கரைப் படுத்துத்தக்க
வாசமிக் கலர்கள்கொண்டு மதியினன் மால்செய்கோயில்

2. முற்றின நாள்களென்று முடிப்பதே காரணமாய்
உற்றவன் போர்களாலே யுணர்விலா வரக்கர்தம்மைச்
செற்றமால் ... ...

3. கட்லிடை மலைகடம்மா லடைத்துமால் கருமமுற்றித்
திடலிடைச் செய்தகோயில் ...

4. குன்றுபோற் றேளுடைய குணமிலா வரக்கர்தம்மைக்
கொன்றுபோ ராழியம்மால் வேட்கையாற் செய்தகோயில் ...

5. வீரமிக் செயிறுகாட்டி விண்ணுற நீண்டரக்கன்
கூரமிக் கவனைச்சென்று கொன்றுடன் கடற்படுத்துத்
தீரமிக் கானிருந்த திருவீரா மேச்சுரம் ...

6. ஆர்வல நம்மின்மிக்கா ரென்றவவ் வரக்கர்கூடிப்
போர்வலஞ் செய்துமிக்குப் பொருதவர் தம்மைவீட்டிந்
தேர்வலஞ் செற்றமால் ...

7. வாக்கினு லின்புரைத்து வாழ்விலார் தம்மையெல்லாம்
போக்கிறற் புடைத்தவர்க ளுயிர்தனை யுண்டுமாருன்
தேக்குநீர் செய்தகோயில் ...

8. பலவுநா டிமைசெய்து பார்தன்மேற் குழுமிவந்து
கொலைவிலார் கொடியராய வரக்கரைக் கொன்றுவீழ்த்த
சிலையினன் செய்தகோயில் ...

9. கோடிமா தவங்கள்செய்து குன்றினர் தம்மையெல்லாம்
வீடவே சக்கரத்தா லெறிந்துபின் னன்புகொண்டு
தேடிமால் செய்தகோயில் ...

10. வன்கண்ணர் வாளரக்கர் வாழ்வினை யொன்றறியார்
புன்கண்ண ராகின்று போர்கள்செய் தாரைமாட்டிச்
செங்கண்மால் செய்தகோயில் ...

11. வரைகளொத் தேயுயர்ந்த மணிமுடி யரக்கர்கோனை
விரையமுற் றறவொடுக்கி மீண்டுமால் செய்தகோயில் ...

என அப்பதிக முழுமையும் பெரும்பகுதி இராமர்தம் வீரம் புலப் படவும், அவனது பக்தித்திறம் அறிவுறுத்தியும் பாடியுள்ளார். அப்பர் பார்வையில் இராமர், உயர்ந்ததொரு வீரத்தலைவனாகவும், இறைவழிபாடு மிக்க பக்தனாகவும் மட்டுமே காட்சியளித்துள்ளார். ஏனையோர்போல் ஏகபத்தினி விரதன் என்றோ; தந்தை சொல் மாறாத் தனயன் என்றோ புகழ்ந்துரைக்காது மாறுபட்ட வகையில் இராமரை நம்மனோர்க்குத் தெளிவுறுத்துகிறார். இராமாயணத்தில் யுத்தகாண்டம் முழுவதிலும் சொல்லப்பட்ட கருத்துக களைத் தம் பதினொரு பாடல்களில் சுருக்கமாக் எடுத்தியம்பியுள்ளார். யுத்தகாண்டத்தில் அரக்கர் தம் வடிவம், குணமும், தொழிலும் பல்லாற்றானும் விதந்தோதப் பட்டுள்ளன. அப்பர் வாக்கில் இராமர் வீரம் புகட்டும் முகமாக அரக்கர் வீரம் பேசப்பட்டுள்ளது. தனக்கு நிகரானதொரு எதிரி யிடத்தே இராமர் போர் செய்தாரென்றும், அப்போர்க்காலத்து சக்கராயுதம் முதலான படைகள் கொண்டு அரக்கரையும், அவர் தம் தலைவனாகிய வரங்கள் பலவும் பெற்ற இராவணனையும் வீழ்த்திய பாங்கும், கடலின் நடுவிடத்தே தீவிலிருந்து இராவணன் போர் செய்ய, அக்கடலையும் துச்சமென மதித்து மலைகளால் பாலமமைத்துச் சென்று வெற்றி கொண்ட தீரமும் எடுத்தியம்பு கின்றார்.

பெரும்படையொன்றில்லாது வானரப்படை கொண்டு இலங் கையை வென்ற காலையும், சிவவழிபாட்டை மனதில் கொண்டு கோயில் செய்து பக்திவயப்பட்ட அவர்தம் பக்தித் திறமும் அப்பரால் எடுத்தியம்பப்பட்டுள்ளது.

திருமுறை ஆசிரியர்கள் இருபத்து நால்வரில் யாரொருவர் பாடலிலும் கூறப்படாத அளவு இராமர் பற்றிய செய்திகளை அப்பர் கூறியுள்ளார். சிவனடியவர்கள் மற்றைய சிவனடியவர்களையும் போற்றி வணங்கும் சங்கம வழிபாடு சித்தாந்தம் கூறும் மூவகை வழிபாடுகளில் ஒன்றாகும். அங்ஙனம் சிவனின் அடியவனாகத் தன்னை நினைந்து அவனை வழிபட்ட இராமரைத்தான் போற்றி புகழ்ந்து சங்கம நெறி நின்ற அப்பர் திறம் வியத்தற்குரியதாம்.

# ஈங்கோய் மலையின் இயற்கை நலம்

பொன்- முத்தையன், எம். ஏ., எம் ஃபில்,

திருவிடைமருதூர்.

இறைவன் எங்கும் உள்ளவன். எல்லாமுமாக இருப்பவன் இறைவனே. அவன் அழிவில்லாதவன். யாண்டும் இருப்பவன் அவன் ஒருவனே. மெய்யுணர்ந்த சான்றோர்கள் இவ்வாறு இறைவனின் பெருமையினைப் பேசிவருகின்றனர். அவர்கள் பரம் பொருளை எங்கும் கண்டு இன்புறுகின்றனர். கண்டு, உணர்ந்த இன்பத்தினை இவ்வுலகுக்கு வழங்கி வருகின்றனர். குறிப்பாக இயற்கையழகின் வழியே அவர்கள் பலரும் இறைவனைக் கண்டு கண்டு மகிழ்ந்துள்ளனர் என்பதற்குத் தமிழிலக்கியத்தில் அன்றுமுதல் இன்றுவரை எத்துணையோ சான்றுகளைக் காட்டலாம். இயற்கையில் இறைவனைக் கண்டு, இன்புற்றுள்ளனர். இயற்கையினைப் பாராட்டுவதே இறைவனைப் பாராட்டுவது எனலாம். இயற்கை என்பது இறைவனின் உருவமன்றோ! சைவத்திருமுறைகளில் இத்தகைய போக்கினை நிரம்பக்காணலாம். பதினொராம் திருமுறையின் கண்ணதாகிய நக்கீரதேவநாயனார் செய்த திருஈங்கோய்மலைஎழுபது என்னும் இலக்கியகியம் காட்டும் இயற்கையழகினைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்

'ஈங்கோய் மலை எழுபது' எனும் இந்நூலின் கண் ஈங்கோய் மலை சிவபெருமானுக்குரிய மலை. அம்மலையின்கண் இன்னின்ன நிகழ்வுகள் நடக்கின்றன என்று இந்நூலாசிரியர் கூறுகின்றார். எழுபது பாடல்களைக் கொண்ட இந்நூலின் ஒவ்வொரு பாடலும் ஒரு சொல்சித்திரம் எனலாம். வேடர், குறத்தியர், செயல்களும் யானை முதலான விலங்குகள், வண்டு முதலான பறவைகள் இம் மலையின்கண் இன்னின்னவாறு உள்ளன என்றும் இந்நூல பாராட்டுகின்றது. ஒவ்வொரு பாடலிலும் இனியதோர் இயற்கைநலம் கவினுற அமைந்துள்ளது, முதல்பாடலில் தொடங்கினல் எழுபதாவது பாடல்முடிய, இடையருத இன்பச் சுவைதரும் இலக்கியமாக இந்நூல் இலங்குகிறது. வல்லமை சான்ற ஓவியர்கள் இதன் பாடல்கள் ஒவ்வொன்றினையும் உயிரோவியமாகத் தீட்டினல்

காணக்கண்கோடி வேண்டும். அத்துணை அழகிய சொல்லோவியங்கள் எழுபது அடங்கிய நூல்தான் 'ஈங்கோய் மலை எழுபது' என்ற இலக்கியம் இச்செவிநுகர் கனிகளில் சிலவற்றை இவண் நாமும் உண்போம்.

ஈங்கோய் மலை குறிஞ்சிநிலம். மலைக்குரிய மக்களாகியவேடர் அவண் வாழ்கின்றனர். கொல்லைகளில் பயிர்வளர்த்துப் பாடுபடுகின்றனர். பறவைகளும், யானை முதலான விலங்குகளும் வந்து பாழாக்காமல் பாதுகாக்கின்றனர். கவண் கொண்டு வீசினால். பறவைகள் அஞ்சிப்பறக்கின்றன. ஆனால் யானைகளை என்ன செய்வது என்று குறவர்கள் மயங்குகின்றனர். எத்துணைமுறை விரட்டினாலும் அவை திரும்பத்திரும்பக் கொல்லைக்கு வருகின்றன. பயிரை மேய்கின்றன. கவண் கொண்டு களிறுகளை விரட்டமுடியவில்லை அவைகளைக் கொல்லவும் மனம் வரவில்லை. என்னசெய்வது என்று எண்ணுகின்றனர் வேடர்கள். சூழ்ச்சி பிறக்கிறது. யானைகள் பருத்த உடல் கொண்டவை. ஆடி அசைந்து வருகுள்ற யானைகள் குழிகளில் விழுந்துவிட்டால் எழுவது கடினம். யானைகளைப் பிடிப்பதே குழிவெட்டித்தானே பயிர்விளைந்த புனத்தினைச் சுற்றிலும், யானைகள் வருகின்ற வழிகளிலும் குழிகளை தோண்டினால் அவை வருவது தடைபடும் என்று கருதி, உடனே அதனைச் செயலாக்குகினறனர். வழியெங்கும் குழிகள் தோண்டப்பட்டு அவைகளைப் பொய்யாக மூடி வைக்கின்றனர். யானைகள் இயங்கும் வழியறிந்த வேடர் இவ்வாறு பல குழிகளை அவைகளின் பாதைகளில் அமைத்து வருகின்றனர். இவ்வாறு யானைக்கு அவர்கள் குழி வெட்டுவது யானைகளுக்குத் தெரிந்துவிடுகின்றது. தொலைவிலிருந்த அவை இதனைப் பார்த்துவிடுகின்றன. வேடர்கள் நமக்குத்தான் குழிபறிக்கிறார்கள் என்று அவை உணர்ந்துவிடுகின்றன. வேடர்களின் தந்திரத்துக்கு மாற்றாக அவையும் தந்திரம் செய்கின்றன. அவை செல்லும் வழியில் எங்கே குழிகள் உள்ளன என்று அறிய அவை தடி ஒன்றினைக் கையில்கொண்டு தரைமீது குத்திப் பார்த்துச் செல்கின்றனவாம். தண்டுஊன்றும்போது அசைவு இருப்பின் அங்கே பள்ளம் மறைந்துள்ளது என்று அவை புரிந்து கொள்கின்றனவாம். இத்தகைய அரிய காட்சிகளையுடையது சிவபெருமானின் ஈங்கோய் மலை என்று அந்தப்பாடல் முடிகிறது. இப்போது இந்த நினைவோடு பாடலைக் காண்போம்.

கொடுவிற் சிலைவேடர் கொல்லை புகாமற்
படுகுழிகள் கல்லுதல்பார்த் தஞ்சி—நெடுநாகக்

தண்டுன்றிச் செல்லுஞ்சீர் ஈங்கோயே தாழ்சடைமேல்
வண்டுன்றுந் தாரான் மலே.

நான்கே அடிகளில், எத்துணே அழகிய கட்சியினைக் காட்டுகிருர் ஆசிரியர். யானைகளின் கூர்த்த மதியினை இப்பாடல் உணர்த்துகின்றது. அறிவியலார் அண்மைக் காலத்தில்தான் இக் கருத்தினை ஆராய்ந்து கண்டு உணர்த்தியுள்ளனர். நக்கீரதேவநாயனுர் அன்றே சொல்லியுள்ளார்.

ஈங்கோய் மலேயின் இயற்கைநலனைப் பாராட்டி இந்த நூலின்கண் விலங்குகளின் செயல்கள்பல எடுத்துரைக்கப் படுகின்றன. குறிப்பாக மந்தி, கடுவன் முதலான குரங்குகளின் செயல்கள் பல சுவைபடப் பேசப்படுகின்றன. மந்திக்குரங்கொன்று கனியுண்டதாம். பின் தாகமெடுக்கவே சுனே நீரினைக் குடித்ததாம். சுனைநீரின் குளிர்ச்சி அதற்குப் போதவில்லேயாம் இங்கும் அங்கும் அலேந்து விட்டுப் பின் விடுவிடுவென்று மலேமீது ஏறி உச்சிக்குச் சென்றதாம் அங்கே மேகம் தவழ்கின்றதாம். கைநகத்தால் மேகத்தினைக்கீறி குளிர்ந்தநீரை யுண்டு மகிழ்ந்ததாம் மந்தி. இப்படியொரு பாடல் சொல்கிறது, இன்னெருபாடலில், கடுவன் குரங்கின் அறியாமையினைப் புலவர் காட்டுகின்ருர். இலவமரம் முகைவிட்டுள்ளதாம். பல்நூறு இலவமொட்டுக்கள் சிவந்தபுள்ளிகளாகத் தோன்றுகின்றன. மரத்தில்ஏறிய கடுவனுக்கு அவை தீப்பொறிகளைப் போலத் தோன்றவே, பக்கத்திலிருந்த தழையினை ஒடித்து அத்தழையால் வீசியதாம், இவ்வாறு குரங்குகளின் செயல்களைப் பாராட்டும் இந் நூலில் இதோ ஒரு பாடல்.

கல்லாக் குரங்கு பளிங்கில் கனிகாட்ட
எல்லாக் குரங்கும் உடன்ஈண்டி—வல்லே
இருந்துகிராற் சுற்கிளைக்கும் ஈங்கோயே மேனிப்
பொருந்தஅராப் பூண்பான் பொருப்பு.

மலேப்பகுதியில் கற்கள்பல சிதறிக்கிடக்கின்றன. பளிங்குக்கல்லொன்று இடையே கிடக்கிறது அருகிலுள்ளது ஒரு கனிமரம். கனியின் நிழல் அப்பலிங்குக்கல்லில் தெரிகிறது இது இயல்பானது. குரங்கொன்று பளிங்கில் தெரியும் கனியினைக்கண்டு மகிழ்கிறது. மெய்யென்றுநம்பி, எல்லாக்குரங்குகளையும் அழைத்து அதனைக் காட்டுகிறது. குரங்குகள் அப்பளிங்குக் கல்லினை உருட்ட ஆரம்பிக்கின்றன 'கல்லாக்குரங்கு' என்ற தொடரால் குரங்கின் அறியாமையினைச் சுட்டுகின்றதிறம் போற்றுதற்குரியது.

முன் இலவமரம் மலையில் நன்கு செழித்துள்ளது. மலரும்பருவ மாதலால் நன்கு மலர்ந்துள்ளது பலநூறுகிளைகளெங்கும் இலவ மலர்கள் நெருப்புத்துண்டங்கள் மலர்ந்துள்ளன. அழகிய மயிலொன்று அந்த இலவமரக்கிளையில் அமர்ந்துள்ளது. பல்லாயிரம் தீப்பொறிகளைப் போன்ற இலவமலர்கள்நடுவே வண்ண மயில் அமர்ந்துள்ள காட்சி, தீயின்நடுவில் உள்ள பெண்ணடியாரைப் போன்றுள்ளது என்று இந்நூலாசிரியர் கூறுகின்றார். அழகான காட்சி தான் எனினும், அக்காலத்தில் தீப்பாய்ந்த பலமகளிரின் நினைவு வந்து நம்மைவாட்டுகிறது யானையின்செயல்கள்பல இந்நூலின்கண் பல்வாறு பாராட்டப் படுகின்றன. பிடியானைக்குக் களிறு அன்புடன் சந்தனத்தழையினை ஊட்டுகிறதாம், சுவையான தேனில் அத் தழையினைத் தோய்த்து, அன்புடன் அருகிருந்து பிடிக்குக் களிறு ஊட்டும் காட்சி, நம் உள்ளத்திலும் காதலுணர்வினைப் பெருகச் செய்வதில் வியப்பில்லை. இன்னொரு பாடலில், சூல்கொண்ட பிடிக்கு அதன் களிறு அன்புடன் தழைதரும் காட்சியினைக் காண் கிறோம். பிடியின் துன்பம் உணர்ந்த களிறு சந்தனத்தழையினைத் தன் கையினால் ஒடிக்கிறது. அன்புடன் பிடியின் அருகில் நின்று அதன்வாயில் உண்ணக்கொடுக்கிறதாம். பிடி, உண்ண உண்ண, மீண்டும் மீண்டும் கொடுக்கிறதாம். எத்துணை அழகிய காட்சி.

நெஞ்சினைத் தொடுகின்ற இன்னொரு காட்சி. முதலில் பாடலைக் காண்போம்.

இடுதினைதின் வேழங் கடியக் குறவர்
வெடிபடு வெங்கவண்கல் ஊன்ற—நெடுநெடென
நீண்டகழை முத்துதிர்க்கும் ஈங்கோயே! ஓங்குமணி
பூண்டகழை யேறி பொருப்பு.

தினைப்புனத்தில் மேய யானைகள் வருகின்றன. அவைகளை விரட்ட வேண்டிக் குறவர் கவண் வைத்துக் கல்விடுகின்றனர். பல கற்கள் விடுவிடுவென்று பறக்கின்றன. யானைகள் வெருண்டோடுகின்றன. மூங்கில் காட்டிடையே புகுந்து ஓடுகின்றன. கவண்கற்கள் அவை மீதும் மூங்கில்கள் மீதும் படுகின்றன. மூங்கிலில் கவண்கல் பட்டதும் அது வெடிக்க, உள்ளிருந்து முத்துக்கள் சிதறுகின்றன வாம். இப்படிச் சொல்கிறது பாடல். கவண் கல்லின் வலிமையும் வேடர் விரைந்து விடுகிற திறனும் மட்டுமல்லாது, மூங்கிலினின்றும் முத்துக்கள் சிதறுகின்ற சிறப்பினையும் ஒருசேரக் கண்டு மகிழ்கின்றோம்.

இதனைப் போன்று எண்ணற்ற இன்பக் காட்சிகள் இந்நூலின் கண் உள்ளன. ஒவ்வொரு பாடலின் முடிவிலும், சிவன் பெருமையினைச் சொல்லி முடிக்கின்றார் ஆசிரியர். மனக்கவலை தீர்ப்பான் மலை, குறித்தவரம் கொடுப்பான் குன்று. குமரன் முதுதாதையார் குன்று கூனற் பிறையணிந்தான் குன்று, வாறு வைத்தான் மலை விண்களிக்க நஞ்சுண்டான் மலை என்றெல்லாம் சிவனைப் பாரட்டுகின்றார். சுருங்கச்சொன்னால், குறிஞ்சியின் நலம் காட்டும்சொல்லோவியக் கூடமாக ஈங்கோய் மலை எழுபது இலங்குகிறது எனலாம். எல்லோரும் இதன் சுவையுணர்ந்து இன்புற வேண்டும்.

# நூல்நிறை

## ஸ்ரீ சங்கர ஜயந்தி — வெள்ளிவிழா மலர்

[பதிப்பாசிரியர்: திரு. ஆங்கீரஸ S. வேங்கடேசசர்மா. பக்கங்கள் 256 + 186. விலை ரூ 20 தபால் செலவு தனி. கிடைக்குமிடம்: ஸ்ரீ சங்கரபக்த ஜனசபா 5, டெலிபோஸ்ட் காலனி குறுக்குத்தெரு, மேற்கு மாம்பலம் சென்னை 600033]

வடமொழி நூல்கள் பலவற்றிற்குத் தமிழில் உரைகண்டு வெளியிடும் பணியில் சங்கரஜயந்தி மலர் முன்னிற்கிறது. அவ்வகையில், ஸ்ரீ சங்கர பத்யபுஷ்பாஞ்சலி, சிவபஞ்சாக்ஷர நக்ஷத்ர மாலாஸ்தோத்ரம் நிக்ரஹாஷ்டகம், துர்க்கா சந்திரகலாஸ்துதி, சிவபஞ்சாக்ஷரஸ்தோத்ரம், சிவஸ்துதி, ஸ்ரீ நடராஜபதி மதுரதசகம் அர்த்தநாரீஸ்வராஷ்டகம், மாத்ருபஞ்சகம், ஸ்ரீ ருத்ரசஹஸ்ரநாமஸ்தோத்திரம், ஸ்ரீ ருத்ரசஹஸ்ரநாமாவளி ஆகியவற்றைத் தமிழுக்கு வரவைத்துள்ள பெருமையைப் பாராட்ட வேண்டும். ஸ்ரீ சங்கர பக்தஜனசபா வெளியீடுகளில் இதுவரை சமஸ்கிருத நூல்கள் மொழிபெயர்க்கப் பெற்றுள்ளது என்ற பட்டியல் பிரமிப்பைத் தருகிறது. (பக் 60, 61, 62 ) இவற்றுள் (120 மொழி பெயர்ப்புக்களில்) இப்பதிப்பில் முதன்முறையாக மொழிபெயர்த்து வெளியிடப் பெற்றவை எத்தனை என்பதனைக் குறிப்பிட்டிருக்கலாம்.

இந்நூல் நாம் வாங்குவது, வாய்ப்பு!

—ம. வே. பசுபதி

# அங்கதம்

தொடர்ச்சி

வே சீதாலெட்சுமி எம். ஏ., எம். பில்.,

திருப்பனந்தாள்.

ஐங்குறு நூற்றில் சுடு சொல்லாகிய அங்கதம் நகைக்குறிப்பு தோன்றப் புலப்படுத்தப்பட்டுள்ளது. பரத்தமையாகிய புறத் தொழுக்கத்திலே ஒழுகிவந்த தலைமகனை நோக்கித் தோழிதன் விருப் பம் கூறுமுகமாக ஓர் உட்குறிப்பையும் கூறுகின்றார். சான்றாக,

"பூத்த கரும்பில் காய்த்த நெல்லில்
கழனியூரன்"

என்பதில் கண்ணுக்கு இனிதாக, நாவிற்குச் சுவையாக விளங்கும் கரும்புபோலப் புலனுக்கு விருந்தாகப் பொழுதிற்குத் துணையாக மட்டுமே அமைவாள் பரத்தை என்பதையும், இல்வாழும் மனைவி யோ உண்ணும் உணவாக, உயிருக்குத் துணையாகப் பயன்படும் கழனி நெல்போல விளங்குவதையும் புலப்படுத்துகிறார். பூப்பதோடு ஒழிவது கரும்பு; பூப்பதோடு நில்லாது காய்த்து வாழ்வுதரும் வளமுடையது செந்நெல். அதுபோல நிகழ்கால நேயத்திற்கும், வருங்கால வாழ்விற்கும் மனைவியே ஏற்ற வாழ்க்கைத் துணைவி யாவாள் என்ற ஒப்பற்ற கருத்தையும் இலைமறை காயாக நுண் மாண் நுழைபுலத்துடன் உணர்த்துகிறாள் தோழி.

**மேனாட்டு இலக்கியங்களில் வசை நூல் வகை :-**

மேனாட்டில் வழங்கும் வசை இலக்கியம் தமிழ் அங்கதத்தோடு பெரிதும் ஒப்புமையுடையது. அங்கும் அங்கதமானது தனி மனிதனது குறையையோ ஒரு சமுதாயத்தின் குறையையோ இலக்கிய உதவிகொண்டு சுட்டித்திருத்தும் தலையாய கொள்கை யுடைய தாயிருந்தது. இத்தகைய தன்மையிருந்து விளங்கும் அங்கதநூல்கள் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெறுகின்றன. (எ. டு.) சுவிப்ட்ஸின் " கலிவரின் யாத்திரைகள் " ( Gullivers Travels ) என்ற நூலைக்காணலாம் " அங்கதம் ஒருவகைக்கண்ணாடி;

அதனைப் பார்க்கிறவர்கள் ஒவ்வொருவரும் [ தங்களுடைய முகத்தைத் தவிர ] மற்றவர்களுடைய முகத்தையும் பார்க்கின்றார்கள். இதுதான் அங்கதமானது உலகில் போற்றப்படுவதற்குக் காரணம். ஆகவே மிகச்சிலர் அதனை வெறுக்கிறார்கள்" என்று சுவிப்ட்ஸின் கூறுகிறார்.

கிரேக்க நாட்டில் மிகப் பழங்காலத்திலேயே வசை நூல்கள் செழிக்கலாயின. கி. மு. 5ம் நூற்றாண்டில் வாழ்ந்த "ஆர்க்கிலோசு" என்றவர் தனிமனிதனின் குரோதம் பொதுசமுதாய வாழ்க்கையில் ஊடுருவுவதனைத்தும் அங்கதத்தின் குறிக்கோளாகக் கொண்டுள்ளார். கிரேக்கநாட்டில் அங்கதத்தைச் சமுகத்தின் மீது பயன்படுத்துவதை அனுமதிக்கவில்லை. எனினும் அங்கதத்தின் இலக்கினின்று யாருமே தப்பிப் பிழைக்கவில்லை. கி. மு. 448ல் வாழ்ந்தவராகக் கருதப்படும் "அரிஸ்டோ போன்சு" என்பவரின் பாத்திரங்களான "யூரிபிடசும், சோபோக்கிளிசும்" கடவுளின் தலைவனை ஜீபிடரையே கேலிக்குள்ளாக்கியுள்ளனர். இங்கிலையில் சோபோக்கிளிசு என்பவர் பிறவா யாக்கைப் பெரியோனாகிய சிவபெருமானின் குற்றத்தையே வீரத்துடன் எடுத்துரைத்த நக்கீரருடன் ஒப்புநோக்கத் தக்கவர். சாக்ரடீசு என்பவர் தம் பேச்சுக்களாலேயே மக்களின் குற்றங்களைச் சாடியவர்.

**ஆங்கில இலக்கியம் :-**

இவ்விலக்கியங்களில் அங்கதம் பேரரசர்களின் நிலைமையினையும், செருக்கினையும் மாற்றியமைக்க உதவியாயிருந்தது, வாட்டர்லூவில் வெற்றி பெற்ற நெப்போலியனைப் பற்றிய பயத்தை மக்களிடமிருந்து மறையச்செய்தது, கில்ரே, ரோலன்சன் பேரன் ஞேரின் அங்கதங்களே; அவை அவனுடைய தவறுகளை வெளிப்படுத்தி மக்களை அமானுஷ்ய நிலையிலிருந்து மனிதத் தன்மைக்குக் கொண்டு வந்தன.

**இத்தாலி :-**

பழங்கால இத்தாலியில் அறுவடைக் காலத்தில் எழும் தரக் குறைவான இன்பச் சூழ்நிலையையும், விளக்க முரட்டுத்தனமான அங்கதம் ஒன்று நிலவுகிறது. லூசியசின் வழிவந்த ஒரேசு என்பவரின் அங்கதம் அன்பும் அறிவுறுத்தும் தன்மையும் கொண்டு விளங்கியது. பெர்சியஸ் என்பவரின் தத்துவ அங்கதங்கள் முன்னதைவிட அறிவுறுத்தும் நிலையில் சற்று முன்னிலையில் நிற்கிறது எனலாம்.

"ஜீவனுல்" என்பவரின் அங்கதங்கள் வாக்கு வாதத்தினுல் சிறந்த நிலையில் உச்சகட்டத்தை அடைந்திருந்தது. இவை துன்பியல் அங்கதங்களின் சாரூகத் திகழ்கின்றன. இவை ரோமர்களின் வாழ்க்கையைப் படிப்படியாக ஆராய்ந்து அதனுடைய மக்கிப் போன கர்வத்தில் ரோமப்பேரரசு அமிழ்ந்துபோகா வண்ணம் தடுக்கப் பேருதவியாயிருந்தது. அவர் அறவழியில் தூண்டப் பட்டிருந்ததால் தலைசிறந்த அங்கதங்களை அவரால் எழுதவியலாது இருந்தன.

நகைச்சுவை, கேலி, வஞ்சப் புகழ்ச்சி, கசப்பான ஏளனங்கள் ஆகிய கதிர்கள் பாய்ந்து நிற்கும் வண்ணப்பட்டியாகவும் சூழ் நிலைக்குத் தக்கவாறு தன் உடல் வண்ணத்தை மாற்றும் பச்சோந் தியாகவும் அங்கதம் தோற்றம் அளிக்கிறது. ஏரர்ஸ்மஸ், என்பவர் அங்கதத்தை மூடப்பழக்க வழக்கங்களுக்கும் அறியாமைக்கும் எதி ராக உபயோகித்தார். 'அல்ரிக்வான் ஹட்டன்' என்பவரின் கேலி கள், கேலிப் பொருளையே நாசம் செய்யும் அளவிற்கு வன்மை பெற்றிருந்தன. அத்தகைய கேலியினை அதன் பலியின்(victim) மூலமே வெளிப்படுத்துவது அங்கதத்தின் வீரியத்தை உச்சநிலைக்கு கொண்டுவருகிறது. குற்றம் சட்டோகிறது. ஆனுல் கௌரவமான 'அரசியல் அங்கதமும்' 'டிரைடனின்' 'அப்சலோம்' 'ஆகிலோபத்து' என்பதன் மூலம் சீரிய முறைக்குக் கொண்டு வரப்பட்டது.

பிற்கால வளர்ச்சி:-

18ம் நூற்ருண்டில் அங்கதத்தின் குறிப்பிடத் தக்க அளவு வளர்ச்சியும், மறுமலர்ச்சியும் பெற்றன. 'பீல்டிங்', ஸ்மோலெட் போன்ருேர் தம் நாவல்களில் அங்கதத்தை நிலைகாட்டினர்

வால்டேர் என்பவர் அங்கதங்களின் வரலாற்றில் தனியான தோர் இடத்தைப் பெறுகிறுர். அவர்தம் காலத்து மக்கள் மதம் பற் றிய நம்பிக்கையாலும் பயத்தாலும் வாழ்ந்தார்கள். ஆனுல் மதங் களோ உண்மையான பக்தியினின்று வழுவி மனித உயிரை; ஏனை அநீதிக்கும் மற்ற நிலைக்கும் ஈர்த்துச் செல்வதாக உணர்ந்தார். எனவேதான் மதங்கள் அவரது தாக்குதலுக்குள்ளாயின. இருப் பினும் 'ஒருபடகின் கதை' என்ற நூலே இங்கிலாந்தில் இந்த வகை அங்கதங்களில் இறுதியானதாக எண்ணப்படுகிறது. 'மாலாக்' என் பவர் தமது 'புதிய குடியரசில்' அங்கதத்தின் கீழ்நிலையான தனிமனித விகடத்தைக் கையாண்டுள்ளார். 'சாமுவேல் பட்லர்'ருடைய அங்கதங் கள் கலகம் விளைவிக்கக் கூடிய ஈர்ப்புத் தன்மையுடையதாயிருந்தது.

இவரது அங்கதத்தில் ஆங்கிலத் தத்துவங்களும், மதங்களும் கறை படிந்தனவாகத் தோற்றமளித்தன. அதனால் அவர் தமக்கே உரித்தான வரண்ட ஆனால் துடிப்புள்ள கேலியால் தம்மைத்தாமே பாராட்டிக் கொள்வோரின் விகடத்தினைச் சுட்டிக் காட்டினார். அவருடைய 'எர்வோனில்' மதஸ்தானங்களின் மூடப்பழக்க வழக்கங்களையும் போலி சம்பிரதாயங்களையும் சாடினார்.

20ம் நூற்றாண்டில் 'பெர்னாட்ஷா' என்பவரின் அங்கதங்கள் சிறந்த நிலையில் வளர்ச்சியடைந்துள்ளன. அவருடைய நோக்குச் சமுதாயத்திற்குச் சவுக்கடி கொடுப்பதிலேயே அமைந்துள்ளது. அவர் தனது 'Androcles and the lion' என்றநூலில் கிறிஸ்தவரின் பழைய நிலையினை அங்கதத்துடன் புலப்படுத்துகின்றார். அவருடைய கவனம் வாழ்க்கை விடுதலையையும், அவருடைய கருத்துப் பொதிந்த நோக்கங்களின் பிரச்சாரமாகவும் உள்ளது.

அங்கத நிறமாலை:-

ஆங்கிலேயர் அங்கதத்தைக் கண்ணாடிக்கு ஒப்பிட்டனர் நிறமாலையாக எழுவகையாகச் சித்தரித்தனர்.

(1) சிரிக்க வைத்து சிந்திக்க வைப்பது.
(எடு) பெர்னாட்ஷாவின் நாடகங்கள்

(2) கேலிசெய்து திருத்துவது:-

(எடு) Alexander pope என்பவர் எலிஸபெத் சமுதாயத்தைத் தனது நூலான 'The Rape of the Lock' என்பதில் கேலிசெய்துள்ளார். தமிழ்ப்புலவர் ஒருவர் கொடாத செல்வரைப், பழித்தும், கொடைவள்ளலைப் புகழ்ந்தும் இவ்விருவரையும் கொண்ட சமுகத்தைக் கண்ணுற்று சற்றே நகைக்கிறார் தம் கவிதையில்,

'உவர்க்கடலன்ன செல்வருமுளரே
கிணற்றூற்றன்ன நீயுமாருனையே'

என்று நகைக்கிறார்

(3) உட்குறிப்பு வைத்துப் பேசுதல்:- (Irony)

எட்மண்ட் பர்க் என்பவர் தம்கவிதையில் ஆங்கில அரசியலை உட்குறிப்பு வைத்துப் பேசித்திருத்தியவர். தமிழிலும் காட்டாக

'பூத்த கரும்பில் காய்த்த நெல்வில் கழனியூரன்'

என்ற தொடர் தலைவனது புறத்தொழுக்கத்தை மாற்றுவதற்காகக் கூறப்பட்டதே.

4) வருந்திப் பேசுவது;-

'இரங்கும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக
இவ்வுலகியற்றி யான்'

என்ற வள்ளுவர் வாய்மொழி சமூக நிலைகண்டு வருந்திக் கூறு வதாக உள்ளது.

(5) குத்திக்காட்டிப் பேசுதல்:- (Sarcaucism)

'சுடர்ப்பூந்தாமரை நீர்முதிர் பழனத்து
அந்தூம்பு வள்ளை ஆய்கொடி மயக்கி
வாளை மேய்ந்த வள்ளெயிறு நீர்நாய்
முள்ளரைப் பரம்பின் மூதரிற் செறியும்'

என்ற பாடல்வரிகள் தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தைக் குத்திக் காட்டிப் பேசுவதாக உள்ளது.

6 சாட்டையடி கொடுத்துப் பேசுதல்:-(Sadonic)

"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

"செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்"

என்ற குறள் கருத்துக்கள் இவ்வகை அங்கதத்திற்கு ஏற்புடையவாக உள்ளன.

7 புதிய உத்தியைக் கையாளுதல்:- (Inventional)

கூறவந்த கருத்துக்களை நேரிடையாகக் கூறாமல் உள்ளார்ந்த பொருள் மூலமாக மறைமுகமாக வெளிப்படுத்துதல் இயற்கைக் காட்சிகளைக் கூறுகின்ற முறையில் தன் கருத்தை அதில் புகுத்திக் கூறுதல் இது ஒரு புதிய உத்திமுறையேயாம்.

முடிவுரை:-

அங்கதமானது ஒழுக்கத்தின் கருவியாகவோ அல்லது காவியத்தின் துணை கொண்டோ வரும் பொழுது இலக்கியக் கலையின் திருப்திகரமான முன்னேற்றத்திற்கு அடிகோலும் பெருந்தன்மையினைப் பெறுகிறது. மேனாட்டு இலக்கியத்தில் இது கவிதை

காவியம், உரைநடை, கடிதம் முதலிய பல்வேறு பிரிவுகளிலும் கலையுணர்ச்சியோடு கையாளப் பட்டுள்ளது. வீரமாமுனிவர் இயற்றிய பரமார்த்த குருகதை தமிழ் உரைநடையில் முதற்கண் அமைந்த அங்கதமாகும். நாவல், சிறுகதை முதலான பல்வேறு துறைகளிலும் நாம் ஓரளவு அங்கதத்தை கையாள முயன்று வருகிறோம். இன்னோரன்ன காரணங்கள் மேனாடுகளில் வழங்கும் வசை இலக்கியம் தமிழ் அங்கதத்தோடு பெரிதும் ஒற்றுமையுடையது என்பது வெள்ளிடைமலை. கூர்த்தமதி, சித்தனையாற்றல் உலகத்தோடு ஒட்டிய ஒழுக்கமும் கொண்டவர்களாலேயே பாடப்படுகிறது.

# இதமான வாழ்வுக்கு எளிய வழிகள்

### இதயபடபடப்பிற்கு

ஒரு ஆழாக்கு பச்சைச் காப்பிக்கொட்டையைத் தூள் செய்து அத்துடன் அரைப்படி தண்ணீர்விட்டு அதை நான்கில் ஒருபங்காக காய்ச்சி அரை ஆழாக்கு வீதம் காலை மாலை கொடுத்து வந்தால் இதயபடபடப்பு குணம்தரும்.

### தலைவலி காய்ச்சலுக்கு

கொதிக்கும் தண்ணீரில் காப்பித்தூளைப்போட்டு அதன் ஆவியை வேது பிடிக்கத் தலைவலி சுரம் குணமாகும்.

### கண்வலிக்கு

படிக்காரத்தைக் கொஞ்சம் எடுத்துச் சுத்தமாகத் தூள் செய்து அதை ஒரு மெல்லிய துணியில் முடிந்து சுத்தமான தண்ணீரில் தோய்த்துக் காலை மாலை கண்ணில் இரண்டுதுளி விட வலிகுணமாகும்.

### கைகால் கடுப்புக்கு

கடுகையும் இஞ்சியையும், அரைத்து வலியுள்ள இடத்தில் லேசாகத் தடவ வேண்டும் (அதிகமாகப் பூசினால் வெந்துவிடும்) வலி விட்டவுடன் கழுவிவிட வேண்டும்.

**D. N. சடையப்பன் S. M. P.**

# அம்மானையின் தோற்றம்

தொடர்ச்சி

கா. சுப்பிரமணியன், ஸ்ரீவைகுண்டம்

தாய்வழிச் சமுதாயத்தில் வெறியாடலைக் குறமகள் நிகழ்த்தினுள். இவ்வுண்மையைக் குறுந்தொகை திருமுருகாற்றுபடை முதலியவற்ருல் அறியலாம். அவ்வகையில் கழங்கு பார்த்தலையும் முதலில் கட்டு விச்சி செய்து வந்திருக்க வேண்டும். இதன் தொடர்ச்சியைக் குறத்தி குறிசொல்லலாகக் "குறம் குறவஞ்சி" போன்ற இலக்கியங்கள் காட்டுகின்றன.

அக்காலச் சடங்குகளில் கழற்சிக்காயை வீசி எறிந்து எண்ணுதலும், எண்ணின் தன்மையைப் பொருத்துக் குறிசொல்லுதலும் முதலில் உண்டாயிற்று. பின்னர்ப் பெண்கள் அதனைப்போலக் கழற்சிக்காயை வீசி எறிந்து ஒவ்வொன்ருகப் பிடித்தல் விளையாட்டாக ஆகியிருக்கும். ஒருத்தி பிடிக்காமல் விட்டுவிட்டால் வேருெருத்தி ஆடினுள். ஒவ்வொரு காயைப் போட்டுப் பிடிக்கும் போது பாடலும் சேர்ந்தது.

தொடர்ந்து ஒருத்தி இரு கைகளாலும் மூன்று அல்லது அதற்கு மேலும் பலகாய்களைக் கீழே விழாமல் பிடித்தெறிந்து விளையாடும் பழக்கம் வந்திருக்கலாம்.

ஒருத்தி ஆடுதல் பாடுதல் என்பது குழுவிலுள்ள ஒவ்வொருத்தியும் ஆடுதலும் பாடுதலுமாக இருந்திருக்கும்.

மூவர் ஒரு குழுவாக அமைந்து ஆடினர். அவர்கள் வினு, விடை பொதுக்கூற்று என மூவகையாகப் பாடி ஆடினர். அப்பாடலில் பழங்காலக் கதைகள் சொல்லளவில் இடம் பெற்றன. விளக்கங்களும் கூறப்பெற்றன சிலப்பதிகாரம், கலம்பக நூல்கள் இந்நிலைகளுக்குச் சான்று. திருவாசகம், பிள்ளைத்தமிழ் ஆகியவற்றில் ஆட்டநிலை நின்றது; கதையமைப்பு நிலைத்தது. இந்நிலையின் தொடர்ச்சியாகக் கதைப் பாடல்கள் மலர்ந்தன; அம்மானை இலக்கிய வகைகளாக அவை புகழ்பெற்றன.

பெண்பாற் பிள்ளைத்தமிழில், அம்மானை, தனிப்பருவமாக அமைந்தது. பெண்பாற் பிள்ளைத் தமிழில் இறுதியில் அமைய வேண்டிய மூன்று பருவங்கள் எவை என்பதில் பாட்டியல் நூல்களிடையே வேறுபாடு காணலாம். கழங்கு, அம்மானை, ஊசல் ஆகிய மூன்றும் இடம் பெறுவதாக இலக்கண விளக்கப்பாட்டியலும் சிதம்பரப் பாட்டியலும் கூறுகின்றன.

கழங்கும் அம்மானையும் வெவ்வேறன்று. ஆயினும் பாட்டியல் நூல்களில் இம்மயக்கம் தோன்றக் காரணம் என்ன? கழற்சிக்காய்க்குப் பதிலாக மரத்தால் பந்து வடிவாக கடையப்பட்ட காயை, அம்மானை, என மகாவித்துவான் திரு. ச. தண்டபாணிதேசிகர் அவர்கள் விளக்கியுள்ளார். இம்மாற்றமே பிற்காலத்தில் அம்மானை, கழங்கு இரண்டும் வெவ்வேறு என்று கருத இடமளித்திருக்கலாம்.

மேற்கண்ட உண்மையைச் சிலப்பதிகார நூலும் அதன் உரையும் கொண்டு நிறுவலாம். நூலில் கொற்றவை வழிபாட்டில், 'பந்தும் கழங்கும் தந்தனர் பரசி' என அறிகிறோம். இங்கு அம்மானை இடம் பெறவில்லை. உரையில் நாட்டுப்பாடல் வகைகளைக் குறிப்பிடும்போது "திகழ் செம்பொன் அம்மானை, பந்து, கழங்காடலாரிக்கும்" என இரண்டும் வெவ்வேருகக் காட்டப்பெற்றுள்ளது. காலப் போக்கில் அம்மானை, கழங்கிலிருந்து வேருகக் காட்டப்பட்டதற்கு இதுவே சான்று. மேலும் பந்திற்கும், மரப்பந்தாகிய அம்மானைக்கும் உள்ள வேறுபாடும் இதனல் அறியமுடிகிறது.

அம்மானை, திருவாசகங்களில் செவ்விலக்கியப் பண்பு பெற்றதற்கு ஏற்ப, இவ்விளையாட்டிற்குத் தத்துவ விளக்கம் தோன்றலாயிற்று. இவ்வுண்மையைத் திருவாசக - திருவம்மானை பழைய உரை புலப்படுத்துகிறது.

"தேனுந்தும் சொல் திருவம்மானை ஆனந்தயோகக் களிப்பதுவாகும் என்று அறிவிக்கிறது. அம்மானை ஆடும் போது கண்ணும் கருத்தும் புறம் செல்லாது தலைக்குமேற் சென்று கைக்கு மீளும் காயையே நோக்கியிருத்தல் போல, துவாத சாந்தம் வரையில் சென்று மூலாதாரம் வரையில் வந்து ஒடுங்கும் சிவசக்தியையே நோக்கியிருத்தல் ஆன்மாவின் இயல்பாகும் என்பதனை விளக்க ஆனந்த யோகக் களிப்பாகிய திருவம்மானையை அடிகள் அருளிச் செய்தார் என்க".

இதேபோன்று "அம்மானைக் காய்கள் முச்சுடர்களாக, முப்புரங்களாக உருவகிக்கப் பெற்று உணர்ச்சியூட்டுகிறது" என அமுதாம்பிகை பிள்ளைத் தமிழின் அம்மானைப் பருவத்தை மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் தத்துவ நோக்கில் விளக்கியுள்ளார்.

20353

இவ்வாறாக சடங்கின் உட்கூறாக விளங்கிய அம்மானை (கழங்கு) பின்னர், போலச் செய்தலாகி, விளையாட்டாக மாறுதல் பெற்றது. ஆடலோடு பாடலும் சேர்ந்து கலைஞர்க்காயிற்று. நாட்டுப்புறக் கலைஞர்களிடமிருந்து (கவிஞர்களிடமிருந்து) எழுத்தறிவு பெற்ற கவிஞரிடம் செவ்விலக்கியமாக மாற்றம் பெற்றது; ஆடல் நின்றது. இச்செவ்விலக்கிய வளர்ச்சிக்கேற்ப அம்மானைப் பாடல்களில் தத்துவ தரிசனம் காணும் நிலை பிற்காலத்தில் தோன்றியது.

மானிடவியலார் வருணிக்கும் மந்திரவாதி, பூசாரி, கலைஞர் (கவிஞர்) தத்துவஞானி என்னும் படிநிலைகளுக்கேற்ப அம்மானையின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் காணமுடிகிறது. அம்மானை (கழங்கு) முதலிருநிலைகளிலும் சடங்கின் உட்கூறாக விளங்கியது. பின்னர் நாட்டுப்புறக் கலைஞர்க்காயிற்று. நாட்டுப்புறக் கலைஞர்களிடமிருந்து எழுத்தறிவு பெற்ற செவ்விலக்கியக் கலைஞர்கள் (கவிஞர்) கைமாறிற்று. அதன் விளைவாக தத்துவ ஞானம் தேடும் நிலை வந்தது.

ஆதியில் பெண் மந்திரவாதிகளால் பயன்படுத்தப்பட்ட கழங்கு அதனை நினைவூட்டும் எச்சமாக இன்று பெரும்பாலும் பெண்கள், சிறுமியர் விளையாட்டாக நிலைபெற்றிருப்பதை நினைந்து மகிழலாம். இவ்விளையாட்டை இன்று, தட்டாங்கல், சொட்டாங்கல், ஐந்தாங்கல் ஏழாங்கல், கழற்சியாட்டம் என்றும் பலபெயர்களில் ஆடி வருகின்றனர்.

கழங்காடலை, பல்லாங்குழியாடலாக, 'தமிழர் கூத்துக்கள்' என்னும் நூல் (ப: 199 200) சாட்டுகிறது. அது பொருந்துவதாகத் தெரியவில்லை.

திருச்செந்திலாண்டவன் துணை

# ஸ்ரீ காசிமடம் வெளியீடுகள்

—o—

| எண் | விபரம் | ரூ. | பை. |
|---|---|---|---|
| | **பன்னிரு திருமுறைகள்** | | |
| 1 | திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் (4, 5, 6, திருமுறைகள்) | 15 | 00 |
| 2 | சுந்தரர் தேவாரம் 7-ம் திருமுறை) | 7 | 00 |
| 3 | திருவாசகம் 8-ம் திருமுறை | 10 | 00 |
| 4 | பெரிய புராணம் (12-ம் திருமுறை) | 12 | 00 |
| 5 | திருத்தொண்டர் புராண சாரம் | 0 | 40 |
| | **ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய நூல்களும் பிற சைவ சமய நூல்களும்** | | |
| 1 | கந்தர்கலி வெண்பா (பட்டுச்சாமி ஓதுவார் உரையுடன்) | 1 | 50 |
| 2 | கந்தர்கலி வெண்பா—சகலகலாவல்லி மாலை (ஆங்கில—ஹிந்தி மொழி பெயர்ப்புடன்) | 1 | 25 |
| 3 | நீதிநெறி விளக்கம் (பட்டுச்சாமி ஓதுவார் உரையுடன்) | 1 | 50 |
| 4 | நீதிநெறி விளக்கம் (ஆங்கில ஹிந்தி மொழி பெயர்ப்புடன்) | 1 | 00 |
| 5 | கந்தர்கலிவெண்பா—மூலம் மட்டும் | 0 | 45 |
| 6 | மதுரை மீனாக்ஷி அம்மை பிள்ளைத்தமிழ் | 0 | 80 |
| 7 | திருவாரூர் நான்மணி மாலை | 0 | 50 |
| 8 | திருவாரூர் நான்மணி மாலை முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் | 1 | 25 |
| 9 | முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் | 0 | 50 |
| 10 | சிதம்பர மும்மணிக்கோவை, செய்யுட்கோவை தில்லைசிவகாமியம்மை இரட்டைமணிமாலை | 1 | 25 |
| 11 | மதுரைக் கலம்பகம் | 0 | 40 |
| 12 | காசிக்கலம்பகம் | 0 | 40 |
| 13 | நீதிநெறி விளக்கமும் நன்னெறியும் | 0 | 20 |
| 14 | திருவருட் பயன் | 1 | 00 |
| 15 | முதுமொழி மேல்வைப்பு | 1 | 00 |
| 16 | Hymns and Proverbs | 0 | 30 |
| 17 | தாழைத்திருமுறை | 0 | 15 |
| 18 | கந்தரனுபூதி | 0 | 25 |
| 19 | திருமுருகாற்றுப்படை | 0 | 30 |
| 20 | கந்தர் அலங்காரம் | 0 | 30 |

ஏ — முன்னது தேற்றம், பின்னது தெரிநிலை. இசின் — அசை.

நு. வி. மரிக்கவேண்டும் - இறக்கவேண்டும். பாணிக்கிரகணம் - திருமணம், கைப்பிடித்தல். பிரசாதித்த — அருளிய.

## தீவினை நிகழ்ச்சி

அறப்பயன் தீரின் அமிழ்தே யானும்
கடுப்பாடு எய்தல் விடுத்தோ இன்றே
தக்கன் எடுத்த முத்தீ முற்றத்
தொக்க வானோர் உற்றதை பெரிதே
எயிறுந் துண்டமும் முகனுங் கையும்
அந்தியும் வாணியும் இந்துவும் எரியும்
இடிப்பத் தக்கன் இருஞ்சிரம் இழந்து
தகர்ச்சிரம் எடுத்துப் பிழைத்ததை அரிதே
வாசவன் கோகிலம் ஆயினன் கேசவன்
பேயாய் அகன்று தாயினன் கடிதே
இந்திர சித்தோடு யாளி வரருசி
தந்திரம் பயின்றோர் தலைமையின் வழாஅர்
வினைப்பயன் உணர்ந்து வெல்வகை நாடித்
தவத்திறம் படருங்காலை முகைத்தபு
கொம்மை வெம்முலை இளையோள் கூடும்
தன்மையன் அன்றியும் அருந்தினன் தணியல்
அயில்புரை நெடுங்கண் அம்பணைத் திரள்தோள்
மயிலியற் சாயல் குயிலியற் கிளவிக்
கலங்கழி மகளிர் ஐயிரு நூற்றுவர்
மணந்தோன் மன்னன் நுணங்க யாளி
கூவல் தூண்டிய காதற் காசனி
ஆதிப் புலைச்சி யாகி மேதினி
இன்னிசை எழுவர்ப் பயந்தோன் ஈண்டே
சிந்து நாடன் செயத்திர தன்முடி
இலங்கிலை வாளியின் இறுத்தோன் நிற்ப
நிலம்புக எறிந்த தன்தலை தவம்புரி

தந்தை தரைசேர் அந்தரம் பெரிதே
பாண்டவர் மரபின் ஆந்தகைக் குரிசில்
சனமேசன் வேள்விக் குருமுனி யுற்ற
தன்மையும் நன்மைய அன்றே விண்ணோர்
மகுடம் புனைந்து நகுடன் பாந்தள்
படிவம் கொண்டு படிசேர்ந் தனனே
திருமணி வள்ளத்து உயிர்மருந்து உதவிற்று
அடப்படு தெண்ணீ ரானும்
உடற்பகை யற்றால் உணருங் காலே.

இஃது ஊழ்வலியால் தீவினை நிகழுங்காலத்து வந்தநன்மையும் தீமையாம் என்று கூறுகிறது.

இ-ள் பூருவ புண்ணிய கன்மம் புசித்துஅற்ற காலத்து அமுதமே யாயினும் நஞ்சின் தன்மைத்தாதல் விட்டொழியுமதில்லை அஃது எவ்வண்ண மென்னில் தக்ஷப் பிரஜாபதியானவன் எடுத்துக் கொண்ட யாகம் முடித்தற்பொருட்டு கூடிய தேவர்கள்பட்ட அபசயம் பெரிதாகும். ஆதித்தர் பன்னிருவருள் ஒருவன் பல்லும் வாணி மூக்கும். சந்திரன் முகமும் அக்கினி கையும் இழப்பத் தக்கன் தனது பெரிய தலை அறுப்புண்டிழந்து பின்பு சிவபெருமான் அனுக்கிரகத்தால் ஆட்டின்தலையைப் பெற்றுப் பிழைத்ததே அரிதாயிற்றுக் காண் இந்திரன் குயிலாய்ப் பறந்து திரிந்தனன் விட்டுணு பேயாய் நீங்கிக் கடிதாகத் தாவிச் சென்றான் இந்திரசித்தும் யாளியும் வரருசியுமாகிய இருடிகள் மூவரும் சாத்திரங்கள் எல்லாம் பயின்று தங்கள் முதன்மைத் தன்மையில் வழுவாதவராகித் தங்கட்குப் பூருவ கன்மபலம் வருவதை முன்பே அறிந்து அதனை வெல்லும் உபாயம் காண்பாராய் தவத்தைப்பூண்டு தேசாந்தரம் சஞ்சரிக்கிற காலத்திலே (வரருசி) கோங்கு அரும்பை வீழ்த்திய திரட்சியும் விருப்பமுமுள்ள தனங்களையுடைய இளையாளைக் கூடுதலாகிய தன்மையுடையனானதே யல்லாமலும் சுராபானமும் பண்ணினான். ஓர் அரசன் தேகம்விட்ட காலத்திலே வேலையொத்த நெடிய கண்ணையும் அழகிய மூங்கிலைப்போன்ற திரட்சையையுடைய தோளையும் மயிலையொத்த சாயலையும் குயில்போன்ற வசனத்தையு

முடைய அவன் மனைவியர்களாகிய மங்கலவணியைக் கழித்த விதவைகள் ஆயிரவரை இந்திரசித்து முனிவன் பரகாயப் பிரவேசம் பண்ண வல்லவன் ஆதலாலே அவனுடைய தேகத்திற் புகுந்து கூடிக் காமவின்பம் கொண்டான். இவ் வண்ணமே யாளியென்பவனும் தன் சிநேகத்துக்கு இருப்பிடமான வளான தன்னாலே கிணற்றிலே தள்ளப்பட்ட பழைய சண்டாளப் பெண்ணாதலாலே அவளோடேகூடி இவ்வுலகத்திலே இனிய கீர்த்தியையுடைய யோகநந்தன் முதலிய பிள்ளைகள் எழுவரைப் பெற்றான். சிந்து விஷயத்திற்குக் கர்த்தாவான செயத்திரதனுடைய தலையை விளங்கா நின்ற இலைபோன்ற அம்பாலே அறுத்த அருச்சுனன் இறவாதுநிற்க இச்செயத்திரதன் பிதாவாகிய விருத்தக்ஷத்திரன் 'என் மகன் தலையைத் தரையில் விழவிட்டார் தலை சின்னபின்னப்பட்டுப் போகவேண்டும்'' என்று சமந்தபஞ்சக மடுவின்கண்ணே நின்று தவசுபண்ண, அவ்வருச்சுனன் தனது அம்புச்சரத்தலே அச்செயத்திரதன் தலையைத் தரையில் விழாதே கொடுசென்று அவன் (வீருத்தக்ஷத்திரன்) கையிலேயிட அந்தத் தலையைக் கண்டு அருவருத்துப் பூமியிலே விழ எறிந்த அவ்விருத்தக்ஷத்திரன் தலை சின்னபின்னமாய்த் தரையில் வீழ்ந்த அந்தரமாகிய தீமை பிரகாசமாய்ப் பெரிதானதன்றோ? பாண்டவர்மரபிலே ஆண்டகைமைக்குத் தலைமையான சனமேசயன் என்னும் பெயரையுடைய இராசன் செய்கின்ற யாகத்திலே ஆசாரியனாகிய முனிவனைச் செய்த பிரமாதத்தாலே குருத்து ரோகமான தன்மையும் நன்கு தெரிந்தனவல்லவோ தேவர்கள் வணங்கும் இந்திரனாய் முடிசூட்டப்பட்ட நகுடன் என்னும் வேந்தன் சத்த முனிவர்களைச் செய்த அவமதிப்பாலே பெரும்பாம்பின் வடிவுகொண்டு பூமியிலே வீழ்ந்தானன்றோ. அழகிய இரத்தினம் இழைத்த வட்டிலிலே பிராணனுக்குக் காப்பாக. அமிர்த சஞ்சீவியான மருந்து கூட்டித் தந்ததாயினும் காய்ச்சித் தெளிந்த குடிநீரேயாயினும் அறிவுடையோர் விசாரிக்குமிடத்து உடலுக்குப் பகையாகும் அந்தன்மையை யுடைத்தன்றோ? எ-று.

ஆல் - அசை. ஏகாரம் - தேற்றம்.

நு. வி. வாணி - நாமகள் தேசாந்தரம் - நாட்டின் கடைகோடி. சுராபானம் - சுரைஎன்னும் புல்லால் செய்யப்பட்ட சுவைநீர். பிரமாதம் - குற்றம்.

"நல்லவை எல்லாம் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு"

என்பர் திருவள்ளுவர்.

39, 40 ஆகிய இருபாடல்களும் இவ்வாரூய ஊழின் வலியைக் கூறுகின்றன.

## பிராரத்த கன்ம சேதம்

41 பழவினை பயின்ற பழுதின்று அயின்று
வருவினை தருஉம் வாயில் அறிவென்
கபாடச் செந்தாழ் கடாஅவ விடாஅது
உடைவ தாயின் ஒழியாப் பாசத்
தொல்லை வல்வினை துகள்தபு காட்சி
செல்லா துறும்அதற்கு எல்லை யாதெனின்
படைப்புப் பூண்ட ஒருவர்க் கவையே
துடைப்புப் பூண எனைப்பல திறத்த
மண்ணை நல்லான் வயிறுதர வந்த
வெண்ணெய் ஒண்பால் புண்ணியக் குழம்பு
மலைய சந்தின் கலைநவில் இன்துணி
நறுநெய் வெண்தயிர் நலங்கேழ் ஒண்படி
மைந்துஅமல் நறுவிரைச் சந்தின் இன்சேறு
ஆகா வாறு போல ஆங்குப்
போகா தம்ம புராதனம் மாகம்
தொடநனி நிவந்த கொடிநுடங்கு ஆரெயில்
வைவேல் முதல பண்இரும்பு அதற்கு
ஐய மில்லாச் செய்தி ஏய்ப்ப
உள்ளத்து உள்ளிய உகுதற்கு
உள்ளத்து உள்ளல் தள்ளுமதி விரைந்தே.

இது பிராரத்த கன்மம் ஞானவுபாயத்தாற் கழியாது, அதை அனுபவித்தே கழிக்கவேண்டுமென்று கூறியது.

## ஆயுள் சந்தா செலுத்தினல்

## ஓர் அன்பளிப்பு

## ஸ்ரீ குமரகுருபரர் திங்களிதழுக்கு
## ரூ. 125 ஆயுட் சந்தா செலுத்தினல்
## ரூ. 55 மதிப்புள்ள
## கந்தர் கலிவெண்பா

இசைத்தட்டு ஒன்று அன்பளிப்பாக அளிக்கப்பெறும்.

**ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய**
**அரிய பாராயண நூலாகிய கந்தர் கலிவெண்பா**
பிரபல இசையறிஞர் சேலம்
**டாக்டர் ஜெயலட்சுமி அவர்களின்**
இனிய குரலிசையுடன் L. P இசைத்தட்டாக
வெளியிடப்பெற்றுளளது.

ஆயுள் சந்தா ரூ. 125 அனுப்புவோருக்கு இந்த இசைத் தட்டு ஒன்று அன்பளிப்பாக அளிக்கப்பெறும்.
அஞ்சல் செலவு ரூ. 9—00.

முன்னமேயே ஆயுட்சந்தா செலுத்தியவர்கள் ரூ. 25-ம் அனுப்புகைச் செலவும் பணவிடை மூலம் அனுப்பி இசைத்தட்டைப் பெறலாம்.

நி. ஆ - ர்

'ஸ்ரீ குமரகுருபரர்'
பதிவு எண். F. N. / KMB / 12.

# ஸ்ரீ குமரகுருபரர்

சமய இலக்கியத் திங்கள் இதழ்

சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| ஆயுள் சந்தா | (உள்நாடு) | ரூ 125-00 |
| ,, | (வெளிநாடு) | ரூ 225-00 |
| ஆண்டுச்சந்தா | (உள்நாடு) | ரூ 10-00 |
| ,, | (ஸ்ரீலங்கா) | ரூ. 13-00 |
| ,, | (வெளிநாடு) | ரூ. 15.00 |

M. O. அனுப்ப வேண்டிய முகவரி:
நிர்வாக ஆசிரியர். ''ஸ்ரீகுமர குருபரர்'
ஸ்ரீகாசிமடம், திருப்பனந்தாள். 612 504.

வெளியிடுபவரும் ஆசிரியரும்: ம. வே. பசுபதி
அச்சிடுபவர் முத்து. மெய்கண்டதேவன்,
ஸ்ரீகுமரகுருபரர் அச்சகம், ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.

**Posted at Sub-Post Office at Tirupanandal**
612504

Licence No. 01. Licensed to Post without Prepayment.

திரு.

ஏ. 67
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
பெஸண்ட் நகர்,
சென்னை — 600 090.